பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ 2/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸ்ரீ ஆவணி மீ 14 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1408 முஹர்ரம் பிறை 16 (30 08 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 170

தங்கம் தேயிலை
50 GRMS NET
TANGAMM TEA
SPECIALLY PACKED FOR THE MEDICAL HALL BY CEYLON COMMODITY MARKETING UNITS COLOMBO

கீல்ஸ் (KEELS) ஸ்தாபனத்தின் பதப்படுத்தப்பட்ட இறைச்சிவகைகள்
ஏகவிநியோகஸ்தர்: மெடிக்கல் ஹோல்
224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## வடக்கு - கிழக்கு மாகாணசபை:

# விடுதலைப் புலிகளைத் தவிர்த்து தேர்தல் நடத்தப் புதுயோசனை

## இந்தியா, இலங்கை அரசுக்குத் தெரிவிப்பு

- கொழும்பிலிருந்து உதயன் சிறப்புச் செய்தியாளர் -

வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலை, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தவிர்த்து நடத்தலாம்.

இவ்வாறு இந்தியத் தரப்பினர், இலங்கை அரசாங்கத்துக்குப் புதிய யோசனை ஒன்றைத் தெரிவித்திருப்பதாக அறியவருகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருந்து ஆயுதங்களை முற்றாகக் களையும்வரை காத்திருக்காமல் வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த வாய்ப்புச் செய்து தருவதாகவும் இந்தியத் தரப்பில் கூறப்பட்டுள்ளதாம்.

போராளி இயக்கங்களாக இருந்து, ஆயுதங்களை ஒப்படைத்து ஜனநாயக வழிக்குத் திரும்ப விருப்பம் தெரிவித்து, இலங்கை அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றும், அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்தும் இருக்கும் அமைப்புகளை இந்தத் தேர்தலில் பங்குபற்றச் செய்வதில் இந்திய தரப்பினர் ஈடுபட்டுள்ளனர்.

அதற்கான பேச்சுவார்த்தைகளையும் நடத்தியுள்ளனர். அவற்றில் பலவும் தேர்தலில் ஈடுபட விருப்பம் தெரிவித்துள்ளனவாம்.

எனினும் ஆயுதத்தைக் கையளித்த அமைப்புகளில் ஒன்று தேர்தலில் போட்டியிட முடியாது என்று தெரிவித்து விட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலை நடத்தக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவிப்பு

கொழும்பு, ஆக. 30

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் பலவீனப்படுத்தப்பட்டுள்ளனர். வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலை இனி நடத்தக்கூடியதாக இருக்கும்.

இப்படி இந்தியா, இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்தி இருப்பதாக கொழும்பிலுள்ள பி பி. சி. செய்தியாளர் கிறிஸ்நட்டால் தெரிவித்தார்.

இச்செய்தியை பி பி சி. வானொலி நேற்று இரவு அறிவித்தது

புதுடில்லியில் இருந்து சனி மாலை திரும்பிய இந்தியத் தூதர் டிக்ஸிட் நேற்று முன் தினம் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்து இரண்டு மணி நேரம் பேசினார் என்பது தெரிந்ததே. (ஒ-எ)

## முச்சந்தி முரளி



அப்ப ஒரு கிழமைக்குப் பயமில்லாமல் மோட்டார் சைக்கிள்கள், ஸகூட்டர்களை தாராளமாய் ரோட்டிலை காணலாம் எண்டு சொல்லுங்கோ..!

## ஒரு வாரத்துக்குப் போதுமான எரிபொருள்

### வடபகுதி வந்து சேர்ந்தது

வடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஒரு வாரத்துக்குப் போதுமான எரிபொருள் வந்துசேர்ந்தது.

இதன் பிரகாரம் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு 45 ஆயிரம் லீற்றர் பெற்றோலும் 71 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெயும், ஒரு லட்சத்து முப்பத்தையாயிரம் லீற்றர் டீசலும் வந்து சேர்ந்தன.

கிளிநொச்சி பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு ஒரு லட்சத்து பதினையாயிரம் லீற்றர் டீசலும், பத்தாயிரம் லீற்றர் பெற்றோலும், 97 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெயும் அங்கு வந்து சேர்ந்தன.

இதேவேளை நேற்று யாழ்ப்பாணத்தின் சகல பகுதிகளுக்கும் பகுதி பகுதியாக எரிபொருள்கள் வழங்கப்பட்டன. (ஒ-ஐ-10)

## வான் மீது சூடு; சாரதியான இளைஞன் பலி

### கல்வியங்காட்டில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஆக. 30

வானில் சென்ற இளைஞர் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் மரணமானார். வானைச் செலுத்தி வந்தவரே மரணமானார் எனத் தெரிய வந்தது.

வானும் விபத்துக்குள்ளாகியது. வானில் வேறு எவரும் இருக்கவில்லை எனச்சொல்லப்பட்டது

நேற்று மாலை 5 மணி அளவில் கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் பேச்சியம்மன் ஆலயத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் வாகனம் மீது நேற்று கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம், ஆக. 30

நேற்று மாலை சுமார் 5 மணியளவில் யாழ். பிரதான வீதியில் உள்ள வஸ்தியான் சந்திக்குச் சமீபமாக பெண் பொலிஸாரை ஏற்றிச்சென்ற வாகனம் ஒன்றை நோக்கி கிரனேட் வீசப்பட்டது. எனினும் குறி தவறி விழுந்தது. சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இந்தச் சம்பவம் பற்றி அறிய வருவதாவது:-

நேற்று மாலை பிரதான வீதி வழியாக வந்து கொண்டிருந்த றிசேர்வ் பொலிஸ் டிரக் ஒன்றின் மீது இனந்தெரியாதவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பெண் பொலிஸார் மீது தாக்குதல் நடத்துவது வீரமா? கோழைத்தனமா?

### சிந்திக்கக் கோருகிறார் கொமாண்டர்

யாழ்ப்பாணம். ஆக. 30

பெண் பொலிஸார் மீது தாக்குதல் நடத்துவது வீரத்தனமா, கோழைத்தனமா?

இந்தக் கேள்வியை யாழ்ப்பாணப் பிரஜைகள் தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைதிப் படையின் நகரக்கொமாண்டர் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டிருப்பதாவது:-

அமைதிப்படையின் நகரக் கொமாண்டர் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த பெண் பொலிஸார் மீது கிரனேட் வீச்சு நடத்தப் போராளிகள் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். நேற்று (திங்கள்) பெண் பொலிஸார் வாகனம் ஒன்றில் பயணம் செய்த போது போராளிகள் இந்த முயற்சியில் ஈடுபட்டனர். சென்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில் நடக்கும்

## உண்ணாவிரதத்தை விஸ்தரிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம் ஆக. 30

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை பிரசைகள் குழுக்களும் அன்னையர் முன்னணியினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

பூசாகைதிகளின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவாக நேற்று நான்காவது நாளாக வீரமாகாளி அம்மன் ஆலய மண்டபத்தில் உண்ணாவிரதம் அனுட்டிக்கப்பட்டது.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பலர் கலந்துகொண்டனர்.

இப் போராட்டத்தைக் கிராம மட்டங்களில் விஸ்தரிப்பதற்கும் தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதேவேளை உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவாக பாடசாலை மாணவர்களும் உண்ணாவிரதத்தில் பங்குபற்ற விருப்பம் தெரிவித்துள்ளனர் என அறிய வருகிறது. (ஒ ஐ-10-9)

## நிவாரண உதவி நாளையே

யாழ்ப்பாணம், ஆக. 30

ஏப்ரல் 5 ஆம், 6 ஆம், 11ஆம் திகதிகளில் இந்தியாவில் இருந்து நாடுதிரும்பிய அகதிகளுக்கு இன்று (30-8 88) வழங்கஇருந்த நிவாரணஉதவி தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை (31-8-88) புதன் கிழமைக்குப்பின்போடப்பட்டுள்ளது. யாழ் அரசாங்க அதிபர் இவ்வாறு அறிவித்துள்ளார். (ஒ)

## சுபநேரம்

30 - 08 - 88
ஆவணி — 14
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10.35முதல் 12 05வரை
ராகுகாலம்:
03 05முதல் 04 35வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
சங்கடஹர கணபதி விரதம்

## ஐ. சோ. அணி பொதுக் கூட்டம் மீது சூடு!

கொழும்பு, ஆக. 30

ஐக்கிய சோஷலிச அணியின் பொதுக்கூட்டம் ஹொரணையில ஹல்வத்துறை என்னுமிடத்தில் நடந்தபோது இனந்தெரியாத சிலர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இச்சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். ஏழு பேர் காயமடைந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர் கைது: தமிழகம் கண்ணீர் சிந்துகிறது

### லோகசபையில் தி. மு. க. சோமு

புதுடில்லி, ஆக. 30

புகலிடம் தேடிவந்த ஈழத் தமிழர்களைக் கைது செய்யும் அவல நிலையைக் கண்டு தமிழகமே கண்ணீர் சிந்துகிறது.

இவ்வாறு திரு. என். வி. என் சோமு (தி. மு. க.) இந்திய லோகசபையில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது :-

தமிழகத்து கவர்னர் ஆட்சி இலங்கைத் தமிழர்களையும் விட்டுவைக்கவில்லை.

150க்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர் தலைவர்களைக் கைது செய்துள்ளது.

மருத்துவமனையில் சிகிச்சைபெறும் நோயாளர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முகாம் மூடப்பட்டது

சாவகச்சேரி, ஆக30

சாவகச்சேரியில் கச்சாயில் இருந்த இந்திய அமைதிப்படை முகாம் மூடப்பட்டுவிட்டது. (ஒ-31)

## விரிவுரையாளர், ஊழியர் தாக்கப்பட்டதாகப் புகார்

### படை அதிகாரிகளிடம் தூதுக்குழு

யாழ்ப்பாணம், ஆக 30

பல இன்னல்களுக்கு மத்தியில் இயங்கி வரும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர்கள், ஊழியர்கள் தொடர்ந்து அமைதிப் படையினரின் தாக்குதல்களுக்கு உள்ளாகும் நிலை தோன்றினால் பல்கலைக் கழகத்தை மூடவேண்டி வரும்.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழகப் பதில் துணை வேந்தர் தலைமையிலான குழு, அமைதிப்படை அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர்கள் அமைதிப் படையினரின் சுற்றிவளைப்பின் போது தாக்கப்படுவது பற்றி அமைதிப்படை அதிகாரிகளிடம் முறையிடுவதற்காக ஒரு குழு நேற்றுக்காலை நகரக் கொமாண்டர் அலுவலகத்துக்குச் சென்றிருந்தது.

யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், பல்கலைக்கழக பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் உட்பட பத்துப்பேர் இந்தக் குழுவில் அங்கம் வகித்தனர்.

இக்குழுவினர் சுமார் 45 நிமிடம் நகரக் கொமாண்டர் அலுவலக உயரதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

பல்கலைக்கழக விரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் சிமெந்து தொழிற்சாலைப் பகுதி நேற்றுச் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 30

காங்கேசன் துறை சிமெந்துத் தொழிற்சாலைப்பகுதி நேற்று அதிகாலை ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு சுற்றிவளைக்கப்பட்டது.

இதனால் காங்கேசன் துறை சிமெந்துதொழிற்சாலைப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

இரவு வேலைக்காக தொழிற்சாலையினுள் இருந்தவர்கள் வெளியே வர அனுமதிக்கப்படவில்லையாம்.

அதேபோல காலை வேலைக்காகப் பலஇடங்களிலும் இருந்து சென்ற தொழிற்சாலை ஊழியர்களில் பெரும் எண்ணிக்கையானோர் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளை விடுவிக்கக் கோரி

# ஊர்வலம் செல்ல முயன்ற 63பேர் சென்னையில் கைது!

சென்னை, ஆக. 30

பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை விடுதலை செய்ய வற்புறுத்தி சென்னை மத்திய சிறைக்கு ஊர்வலமாகச் செல்ல முயன்ற 63 பேர் கைது செய்யப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் தோழமைக் கழகத்தினர் சென்னை மத்திய சிறை முன் மறியல் செய்ய முடிவு செய்தனர்.

அதற்காக அந்த இயக்கத்தைச் சேர்ந்த 63 பேர் குறளகம் முன் திரண்டனர்.

கே. இராமகிருஷ்ணன், தீனன் தலைமையில் ஊர்வலமாகப் புறப்பட அவர்கள் தயார் ஆனார்கள்.

அப்போது அந்த இடத்துக்கு விரைந்து வந்த பொலிஸார் 63 பேரையும் கைது செய்து பொலிஸ்வானில் ஏற்றிச் சென்றனர்.

புதுக்கோட்டை ஷெரிப், பொள்ளாச்சி மனோகரன், தர்மராஜ், உடுமலைப்பேட்டை ரங்கராஜன், சோலை ராமமூர்த்தி, நாகராஜ் ஆகியோர் கைதானவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

★ "புலிகளுக்கு ஆயுதம் கொடுத்து வளர்த்தது ஏன்?

★ "அடிவயிற்றில் அடிப்பது ஏன்?" என்று அவர்கள் கோஷமிட்டனர். (ஒ-எ)

‘ஷப்ரு’ அறிவித்தல்

இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நாளை மறுதினம் (01-09-1988) முதல்
ஷப்ரு நிதி நிறுவனம்
முதலீட்டுக்கான வட்டிவீதத்தை அதிகரித்திருக்கிறது.
மேலதிக விவரங்களுக்கு:-
ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பதிவு செய்யப்படாத Honda CD 125, Twin C- 50, Charly என்பவை களும், உபயோகித்த Honda Express ST இரண்டும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. லால், 116, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (6206)

CB 125 T ஹொண்டா மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: K. வைரமுத்து இல: 46, கலட்டி அம்மன் கோவில் வீதி, யாழ்ப்பாணம். (6203)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, அலுமாரி, கட்டில், Show - Case, கண்ணாடிமேசை, Office மேசை, சாப்பாட்டு மேசை, கதிரைகள், விருந்தைக் கதிரைகள், பலவித பித்தளைப் பொருட்கள், Steel அலுமாரி, மெற்றல் கதிரைகள் மற்றும் பலவிதமான பொருட்களும் மிகவும் மலிவுவிலையில் உடன் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜன், 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (சென். பற்றிக்ஸ் சந்தியருகில்.) (5995)

பெரிய 2 கதவு குளிர்சாதனப்பெட்டி கடைப் பாவனைக்கு உரியது உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென்பற்றிக்ஸ் சந்தியருகில்.) (5994)

### மைசூர் No. 1 அரிசி விற்பனை

மிகவும் கைதேர்ந்த தொழிலாளர்களால் சுகாதார முறைப்படி அதிநவீன இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்பட்டு விற்பனையாகிறது No.1 அரிசி. சகலதேவைகளுக்கும் கல் இல்லாத சுக்சம், சுவை, தரம் நிறைந்த மைசூர் No. 1 அரிசியையே உங்கள் அருகாமையிலுள்ள கடைகளில் வாங்கிப் பாவியுங்கள். தயாரிப்பாளர்: மைசூர் அரிசி ஆலை, சுதுமலை, மானிப்பாய். (5807)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேஷட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

## தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு அளவான சகல வசதிகளும் கொண்ட வீடொன்று தேவை. நல்லூர் நாயன்மார்க்கட்டு, கண்டுக்குளி பகுதிகளில் தேவை. தொடர்பு: இல. 82 C/o உதயன்-யாழ்ப்பாணம் (6068)

ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு பெண் உதவியாளர் தேவை. ஓரளவு தையல் அனுபவம் உள்ளவர்களும், யாழ்நகரின் இரண்டு மைல் சுற்றுடலில் வசிப்பவர்கள் உடன்தேவை. நற்சான்றுப் பத்திரங்களுடன் 3 - 9 - 88 ஆம் திகதி சனிக்கிழமை நேரில் வரவும். சிற்றி என்ரபிரைஸஸ், (மேல் மாடி) 198 B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (5949)

### தவறிவிட்டது

28- 8- 88 ஞாயிற்றுக்கிழமை யாழ். பஸ் நிலையத்திலிருந்து சச்சேரி செல்லும் மினிபஸ் ஒன்றில் 280412538V அடையாள அட்டை தவறிவிட்டது நா. நாகசுந்தரம்பிள்ளை, 478/17, அளுத்மாவத்தை, கொழும்பு என்ற விலாசமுடையது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் பாதுகாப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கவும். (6071)

### சிவா மெக்கானிக் வேக்

குளிர்சாதனப் பெட்டி, மின் விசிறி, மோட்டார், மின் அடுப்பு, அயன் மற்றும் மின்சார உபகரணங்கள் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சிவா மெக்கானிக் வேக், பிரதான வீதி, (அச்சுவேலி மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில்). அச்சுவேலி. (6205)

### குழாய்க் கிணறுகள்

ரூபா 6500/- மட்டுமே! குறைந்த செலவில் சிறந்த முறையில் மனிதனின் சக்தியையும் மெஷினின் சக்தியையும் பாவித்து செய்யும் ஓர் கூட்டு முறை - மோட்டரோ, வோட்டர் பம் மூலமோ தொடர்ச்சியாக 24 மணித்தியாலமும் இறைத்துப் பார்க்கலாம். மின்சாரமோ, மோட்டரோ இல்லாதவர்களுக்கு கைப்பம்பு (Hand Pump) பூட்டிக் கொடுக்கப்படும். தொடர்பு: றெக்ஸ் எஞ்ஜினியர்ஸ் பருத்தித்துறை வீதி. யாழ்ப்பாணம். (6207)

### TOEFL வகுப்புகள்

இலவச மாதிரி வினாப் பத்திரங்களுடன் நடைபெறுகின்றன. சனி, ஞாயிறு காலை 10/30—12/30, திங்கள், புதன் காலை 8/30—10/30 தொடர்புகொள்க: S.B Iyar, 12, வைமன் வீதி. நல்லூர். (6062)

### பிரெஞ்ச் மொழி

1988 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க விசேட "பிரெஞ்ச் மொழி" வகுப்புக்கள் சலுகைக் கட்டணத்தில் 1- 9. 88 இல் ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு :- "Alliance Francaise De Jaffna" (யாழ்/ பிரெஞ்சிய நட்புறவுச் சங்கம்) 130, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [5929]


காங்கேசன்துறைப் பகுதியில்

# சனிக்கிழமை வந்த அகதிகளுக்காக வியாழனிலிருந்து கட்டுப்பாடுகள்

காங்கேசன்துறை, ஆக30

கடந்த சனிக்கிழமை இந்தியாவிலிருந்து கப்பலில் அகதிகள் வந்ததை ஒட்டி கடந்த வியாழக்கிழமையிலிருந்தே காங்கேசன்துறைப் பகுதியில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலும் அதன் சுற்றுடலிலும் நின்ற அமைதிப் படையினர், நடேஸ்வராக் கல்லூரியில் உள்ள அகதிகள் முகாம் பக்கமாக எவரையும் செல்லவிடவில்லை.

இவ்வளவு முன்னேற்பாடுகள் செய்யப்பட்ட போதும் அகதிகள் வந்திறங்கிய பின்னர் அவர்கள் நடேஸ்வராக் கல்லூரி முகாமுக்கு அனுப்பப்படவில்லை. திடீரென எடுத்த முடிவையடுத்து யாழ் இந்துக்கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கடந்த தடவை அகதிகள் கப்பலில் வந்து நடேஸ்வராக் கல்லூரி முகாமில் தங்கியிருந்த போது அங்கு குண்டு ஒன்று வெடித்தது தெரிந்ததே.

அதை அடுத்தே இம்முறை அகதிகள் வந்திறங்கியபோது காங்கேசன்துறைப் பகுதியில் கட்டுப்பாடுகளும் கெடுபிடிகளும் அதிகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில் காங்கேசன்துறையில் சந்து பொந்துகள், ஒழுங்கைகள், கட்டடங்கள், வீதிகள் யாவற்றிலும் அமைதிப்படையினர் காவல் கடமையில் ஈடுபட்டனர். அடிக்கடி கால் நடையாகவும் வாகனங்களிலும் ரோந்து சுற்றி வந்தனர். பொதுமக்களும் கடும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

## சாவகச்சேரி இந்துவிலிருந்து 19 பேர் தெரிவு

சாவகச்சேரி, ஆக, 30

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இருந்து இம்முறை 19 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

விவரம் வருமாறு:-

உயிரியல் விஞ்ஞானம்- 02, பொறியியல்- 01, கணித நிலஅளவையியல் - 01, பௌதிகவிஞ்ஞானம்- 03, முகாமைத்துவம்- 04, வர்த்தகம்- 04, கலை- 04,

(ஓ - 31)

## இளைஞன் தற்கொலை!

காரைநகர், ஆக. 30

காரைநகர் இலந்தச்சாலை (அல்லின் வீதி) யைச் சேர்ந்த 23 வயது இளைஞர் ஒருவர் கடந்த சனிக்கிழமை இரவு நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

குடும்பத்தவருடன் ஏற்பட்ட சிறு சச்சரவு காரணமாக மனம் உடைந்த நிலையில் இவர் தற்கொலை செய்து கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-73)


## A/L 89 பகல் நேர வகுப்பு

10.30: காவிகள்
11.45: திரிகோண கணிதம்

ஆரம்பம்: 05-09-1988

ஆசிரியர்: திரு. ரவிமோகன்

யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்) (6069)

## தவறிவிட்டது

H. 0450452 இலக்கத்தை உடைய கடவுச்சீட்டு (Passport) டன் ஒரு International Driving Licence 26. 8. 88 அன்று வவுனியாவில் இருந்து வாடகைக் கார் ஒன்றில் யாழ்ப்பாணம் வரும்பொழுது ஆனையிறவுக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் தவறிவிட்டது

இவற்றைக் கண்டு எடுத்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்:

கமலநாதன் - உமாபதி
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
(6036)

## பாலர் ஆசிரியை தேவை

மானிப்பாயில் ஆரம்பிக்கப்படவுள்ள பாலர் பாடசாலைக்கு, பாலர் ஆசிரியைப் பயிற்சி பெற்ற ஆங்கிலம், நடனம், சங்கீதம் ஓரளவுக்குத் தெரிந்த சேவை மனப்பான்மையுமுள்ளோரிடமிருந்து 15-9-88க்கு முன் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சி. விஸ்வலிங்கம்
செயலாளர்.

மானிப்பாய் கோயிற்பற்று
இந்துசமய விருத்திச் சங்கம்
ஆனைக்கோட்டை. (6044)


# கவின்கலைப்போட்டிகள் 3 கட்டங்களாக நடக்கும்

பலாலி, ஆக. 30

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான இசை, நடன, நாடகப் போட்டிகள் மூன்றாம் தவணைக் காலத்தில் மூன்று கட்டங்களாக நடத்தப்படவிருக்கிறது.

கொத்தணி அல்லது வட்டாரநிலையிலும், பிரதேச நிலையிலும், அகில இலங்கை நிலையிலும் நான்கு பிரிவுகளில் இப் போட்டியை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஆண்டு ஒன்றில் இருந்து ஆண்டு ஐந்துவரை ஆரம்பப் பிரிவாகவும், ஆண்டு ஆறில் இருந்து ஆண்டு எட்டு வரை கனிஷ்ட இடைநிலைப் பிரிவாகவும் ஆண்டுஒன்பதிலிருந்து ஆண்டு பதினொன்றுவரை சிரேஷ்ட இடைநிலைப் பிரிவாகவும், ஆண்டு 12, 13 ஆகியவை மேற்பிரிவாகவும் போட்டிக்குழுக்கள் பிரிக்கப்படும்.

இசை, நடன, நாடகம் சார்ந்த திறமையுடைய மாணவர்கள் தமதுதிறமையைவெளிக்காட்ட வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதும், மாணவர் மற்றும் ஆசிரியர்களது சக்தியை மேம்படுத்த வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பதும் அவ்வத்துறைகளில் அவர்களை ஆற்றல் பெறச் செய்வதுமே இப்போட்டிகளின் நோக்கம் என சகல பாடசாலைகளுக்கும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இப்போட்டிகளுக்கு விண்ணப்பிக்கும் இறுதி நாள் செப்டெம்பர் 15 ஆகும்.

வெவ்வேறு நாட்களில் தனித்தனியாக நடத்தப்படவுள்ள இசை, நடனம், நாடகப் போட்டிகளில் கொத்தணி அல்லது வட்டார மட்டத்தில் வெற்றிபெறுபவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளுக்குப் பாடசாலை ஒன்று இசையில் மூன்று அணிகளையும், நடனத்தில் இரண்டு அணிகளையும், நாடகத்தில் இரண்டு அணிகளையும் அனுப்ப முடியும் என்றும்—

எனினும் ஆகக் கூடியது நான்கு நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே ஒருபாடசாலை விண்ணப்பிக்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-119)

# இங்கேயும் திருட்டு

யாழ்ப்பாணம், ஆக. 30

இந்தியாவில் இருந்து அகதியாகக் கப்பலில் திரும்பி யாழ் இந்துக் கல்லூரியில் தங்கியிருந்த ஒருவர் தன்னுடன் கொண்டு வந்த சைக்கிளை அங்கு வைத்துப் பறிகொடுத்தார்.

யாழ் இந்து முகாமில் இருந்து புறப்படும் நேரம் சைக்கிள் உரிமையாளர் வேறு ஒருவரிடம் சைக்கிளை பார்த்துக் கொள்ளுமாறுகூறிவிட்டு வேறு வேலையில் ஈடுபட்டாராம்.

பின்பு திரும்பி வந்து பார்த்தபோது பாதுகாப்பாக விட்டுச் சென்றவரையும், சைக்கிளையும் காணவில்லையாம். (க)

# சந்நிதியிலும் திருட்டு

பலாலி ஆக 30

நீண்ட நாள் இடைவெளியின் பின் சிறப்பாக நடைபெற்ற தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய தேர், தீர்த்த உற்சவங்களின் போது பதினொரு தாலிக்கொடிகளும், ஏழு தங்கச்சங்கிலிகளும் களவாடப்பட்டிருக்கின்றன.

செல்வச்சந்நிதி ஆலய உற்சவத்திற்கு இம்முறை பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் வந்து கூடியிருந்தனர். இதனால் ஏற்பட்ட நெருக்கடியைத் திருடர்கள் தமக்கு சாதமாகப் பயன்படுத்திக்கொண்டனர். இந்தத் திருடர்களில் ஒருவர்கூடப்பிடிபடவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(உ - 119)

# அமைதிப் படையினர் மக்களின் எதிரிகள் அல்லர்

## இப்படிக் கூறுகிறார் பிரிகேடியர்

மட்டக்களப்பு, ஆக. 30

இந்திய அமைதிப்படையினர் மக்களின்எதிரிகள் அல்லர், இயக்கங்களின் விரோதிகளும் அல்லர்.

மேற்கண்டவாறு மட்டக்களப்பு இந்தியப் படை இணைப்பதிகாரி பிரிகேடியர் ஐ. எம். தார் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து மீட்கப்பட்ட ரி. வி, உரிமையாளர்களிடம் கையளித்த பின்பு மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இம்மாவட்டச் சிவில் நிர்வாகத்தடை போன்ற நடவடிக்கைகளினால் பாதிக்கப்படுவது நாங்கள் அல்ல. பொதுமக்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள்.

இவ்விடயத்தில் இந்தியப்படையினரோ அல்லது பொது அமைப்புகளோ எதுவும் செய்ய முடியாதநிலை இருக்கிறது. பொது மக்கள்தான் குரல் எழுப்ப வேண்டும் என்று அவர் கூறினார்.

(ஓ - 21)


## வேண்டுகோள்

### அகதிகள் புனர் வாழ்வு நிதியம் - 1983

மேற்படி நிதிய காரியாலயத்திற்குச் சொந்தமான "ஒப்ரிமா - Optima" ஆங்கில தட்டச்சு இயந்திரம் சென்ற 26 - 08 - 1988 போயாதின விடுமுறை நாளில் களவாடப்பட்டுள்ளது. இத்தட்டச்சு இயந்திரம் 1983 ஆம் ஆண்டில் இருந்து களவாடப்பட்ட தினம் வரை பாதிக்கப்பட்ட மக்களின் அவல நிலையை வெளிநாட்டு ஸ்தாபனங்களுக்கு கடிதமூலம் தொடர்பு கொண்டு நிதி உதவி பெற்று எம் மக்களுக்குப் பகிர்ந்தளிக்க மிகவும் உதவியாக இருந்தது இப்படிப்பட்ட ஸ்தாபனத்தில் உள்ள ஒரேஒரு தட்டச்சு இயந்திரம் களவாடப்பட்டது மிகவும் அநீதியான ஒரு செயல் ஆகும். இச்செயல் எமது பாதிக்கப்பட்ட சமூகத்துக்கு செய்த துரோகம் ஆகும். ஆகவே இதில் சம்பந்தப்பட்டவர்கள் செய்த தவற்றை உணர்ந்து இந்தத் தட்டச்சு இயந்திரத்தை எமது காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி மிகவும் தயவாக வேண்டுகின்றோம். இத்தட்டச்சு இயந்திரம் இல்லாமல் எமது நிவாரண வேலைகள் சம்பந்தமான கடிதத் தொடர்புகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக உடனடியாக இதைத்திரும்ப ஒப்படைக்க, சம்பந்தப்பட்டவர்கள் தயக்கம் காட்டமாட்டார்கள் என்று நம்புகின்றோம்.

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் - 1983

73, பிரிந்தாபவனம்,
கண்டி றோட், கண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (C6...)


## ஜனாதிபதித் தேர்தல்: தனியான பொலிஸ் பிரிவு திறக்கப்படும்

கொழும்பு, ஆக, 30

ஜனாதிபதித் தேர்தல் பற்றிய முதலாவது சுற்று நிருபத்தை, தேர்தல் ஆணையாளர் இவ்வாரம் உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைப்பார்.

இதனிடையில் பொலீஸ் திணைக்களத்தில் ஜனாதிபதித் தேர்தல் பிரிவு ஒன்று திறக்கப்படவுள்ளது இதற்கு சிரேஷ்ட பொலீஸ் அதிபர் ஏ. ஜோசப் பொறுப்பாகஇருப்பார். (உ—எ)

## நிதி உதவி வழங்க ஏற்பாடு

கோப்பாய், ஆக 30

அசம்பாவிதங்களினால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு புனர்வாழ்வு மீள்பயிர்ச்செய்கை என்பனவற்றில் ஈடுபடுவதற்கான நிதி உதவியை வழங்குவதற்கு கோப்பாய் வடக்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் மிகத்துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

(உ-72)


## விற்பனை

சுன்னாகம் பழைய பொலீஸ்நிலையத்துக்கு அருகாமையில், K. K. S. வீதியில் அமைந்துள்ள கடை இல.105, குத்தகைக்கு விடப்பட உள்ளது. அத்துடன் நல்ல நிலையிலுள்ள HONDA CD 125 விற்பனைக்கு உள்ளது. உடன் தொடர்பு கொள்ளவும்

தி. நிமலன்
இல. 105, K.K.S, வீதி
சுன்னாகம்.
(6045)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### மருத்துவ பீடம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட 1983ஆம், 1984 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் 05- 10. 1988 இல் ஆரம்பமாகும்.

(C/6454) - பதிற் துணைவேந்தர்

## ENGLISH CLASSES

சகல தரத்தினருக்குமான விசேட ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

உங்கள் பதிவுகளுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, St. Peters Lane,
JAFFNA.

(C/6451)

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**SPECIAL SPOKEN ENGLISH**
(with Grammar)

by Mr. A, REGINALD
(Foreign Trained)

New Batch on:
Time: 3 p.m. 2-9-1988

(C/6452)

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



பிரம்மஸ்ரீ
ந. தண்டாயுதபாணி குருக்கள்
(கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானம்)

பிறப்பு: 1- 7- 1928
இறப்பு: 10- 9- 1987

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எமக்கெல்லாம் வழிகாட்டிய அன்புத் தந்தையே! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயங்களை விட்டகலா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மாவடி றோட்,
சித்தன்கேணி. (6035)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விசாரணை ஆரம்பம்

மட்டக்களப்பு ஆக 30

மட்டக்களப்பு 2ஆவது நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் ரிஸ்வி சின்ன லெப்பை மீது காத்தான்குடி பள்ளிவாசலில் இடம்பெற்ற தாக்குதல் குறித்து மட்டக்களப்பு பொலீசார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த மே மாதம் காத்தான்குடி ஜமிலாழ் ரபீன் பள்ளிவாசலில் ஜும்மா தொழுகையின் பின்பு பேச முயன்ற சமயம் இவர் அங்கு குழுமியிருந்த சிலரால் தாக்கப்பட்டார் என்பது தெரிந்ததே. (ஒ-சி-21)

## சுட்டுக்கொலை

மட்டக்களப்பு ஆக 30

இரவு நேரம் இனந்தெரியாத நபர்களால் விசாரணைக்காக அழைத்து செல்லப்பட்ட இளம் குடும்பஸ்தரொருவர் இருமணித்தியாலங்களின் பின்பு துப்பாக்கி சூட்டுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இருதயபுரம் வாசியான பிள்ளையான் பவளராஜா (24) வயது என்பவரே கொலையுண்டவராவர். (ஒ-21)

# காணமற் போனவர்களின் குடும்பங்களுக்கு மட்டும்

## நிவாரணம் இல்லையா?

யாழ்ப்பாணம், ஆக 30

அண்மைக் கால அசம்பாவிதங்களின் போது காணமல் போனவர்களின் குடும்பங்களுக்கு எதுவிதமான நிவாரணமும் வழங்கப்படாதது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் மத்தியில பெரும் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது.

அசம்பாவிதங்களின் போது உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் மற்றும் சொத்துக்களை இழந்தவர்களின் குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டு வந்த போதிலும், காணமல் போனவர்களின் குடும்பங்களைப் பொறுத்தவரையில் நிவாரணம் எதுவும் இல்லையே என்று பாதிக்கப்பட்டவர்கள் குரல் எழுப்ப ஆரம்பித்துள்ளனர்.

காணமல் போனவர்களின் குடும்பங்களுக்கு உதவியில்லையா? குடும்பத் தலைவரை இழந்து நிற்பவர்களுக்கு நிவாரணம் இல்லையா? அரசாங்கம் காணமல் போனவர்களின் குடும்பங்கள் மேல் அக்கறை செலுத்தவில்லையா? அரசாங்க அதிபரும் மற்றும் நிவாரண உதவிகளை வழங்கும் பொது ஸ்தாபனங்களும் எமக்கு உதவமாட்டார்களா என்று பாதிக்கப்பட்ட பெண்மணி ஒருவர் உதயன் செய்தியாளரிடம் அங்கலாய்ப்புடன் கேட்டார். (ஒ-ஐ)

# அக்கரைப்பற்றிலிருந்து சிங்களக் குடும்பங்கள் இடம் பெயர்ந்தன!

அம்பாறை, ஆக. 30

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த அக்கரைப்பற்றில் நீண்டகாலமாக வாழ்ந்து வந்த சிங்களக் குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளன.

அக்கரைப்பற்றில் நீண்டகாலமாக வசித்துவந்த பிரபல வர்த்தகப் பிரமுகர் திரு. எட்மன் சில்வா உட்பட அவரது குடும்பத்தவர்கள் ஐவர் இம் மாதம் முதல் வாரத்தில் பயங்கரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர்.

இனந் தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட இந்த படுகொலைச் சம்பவத்தை அடுத்தே அக்கரைப் பற்றில் வசித்து வந்த சிங்களக் குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறி அம்பாறையிலுள்ள தமது உறவினர்களிடம் தஞ்சமடைந்திருக்கின்றனர்.

தற்பொழுது அக்கரைப்பற்றில் ஒரு சிங்களக் குடும்பம் தானும் இல்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் நல்லபிமானத்தைப் பெற்றுத் திகழ்ந்த வர்த்தகப் பிரமுகர் திரு. எட்மன் சில்வாவையும் அவரது குடும்பத்தவரையும் படுகொலை செய்யக் காரணமானவர்கள் தங்களால் தண்டிக்கப்படுவார்கள் என தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (உ-14)

## ஆசிரியகலாசாலை இறுதிப் பரீட்சை

மட்டக்களப்பு ஆக 30

ஆசிரிய கலாசாலைகளில் தற்போது இறுதியாண்டு பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சை எதிர் வரும் நவம்பர் 26 ஆம் திகதி ஆரம்பமாகும்.

ஏற்கனவே சித்தி பெறுதவர்கள் அல்லது மீண்டும் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியவர்கள் தமது விண்ணப்பங்களை உரிய கலாசாலைகளின் அதிபர்கள் மூலம் எதிர்வரும்9ஆம்திகதிக்கு முன்பு அனுப்பி வைக்க வேண்டும். (உ-21)

## பாடசாலைக்கு அன்பளிப்பு

சுழிபுரம். ஆக. 30

சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிசன் பாடசாலை அபிவிருத்திச் சபைக்கு ரூபா ஐயாயிரத்தை ஜேர்மனில் வாழும் சுழிபுரம் கிழக்கு வாசிகள் வழங்கியுள்ளனர்.

பாடசாலை ஆசிரியர் பற்றுக் குறையை நீக்க ஆசிரியர் ஒருவரை நியமித்து வேதனம் வழங்க இந்த நிதியைப் பயன்படுத்துமாறு அவர்கள் வேண்டியுள்ளனர். (ஒ-28)

புலோலி மேற்கில் நஷ்டஈடு

# 167 விவசாயிகளுக்கு ரூபா இரண்டரை லட்சம்

பருத்தித்துறை, ஆ 30

புலோலி மேற்கில் 167 விவசாயக் குடும்பங்களுக்கு 2 இலட்சத்து 50ஆயிரம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை இராணுவ முகாமிற்கு அருகாமையில்விவசாயத்திலீடுபட்ட 167 விவசயக் குடும்பங்கள் மீளவும் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்குப் பொருளாதார உதவி வழங்க அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் முன்வந்துள்ளது.

மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினர் மேற்கொண்ட பாதிப்புத் தொடர்பான மதிப்பீடுகளைப் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் நேரில் சென்று பார்வையிட்டார். பின்னர் அது குறித்து புனர்வாழ்வுக் கழகத்திற்கு அவர் செய்த சிபார்சின் பேரில் ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திற்கும் ரூபா 2 ஆயிரத்து 500 வழங்க அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் இணங்கியுள்ளது.

இப்பணத்தின் முதற் கட்டமாக மேற்படி விவசாயக் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூபாஆயிரத்து 500 அண்மையில் வழங்கப்பட்டது. மிகுதிப் பணம் ரூபா ஆயிரம் அடுத்த மாத இறுதியில் வழங்கநடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிலையத் தலைவர் திரு. க தங்கராசா தெரிவித்தார். (உ-118)

## அந்தப்பதவி ஒழிப்பு

கொழும்பு, ஆக 30

ஆண்டாண்டு காலமாக அரசு அலுவலகங்களில் இருந்து வரும் விடய எழுது வினைஞர் (Subject Clerk) பதவி விரைவில் ஒழிக்கப்படவிருக்கிறது.

முதல் கட்டமாக மேற்கு மாகாண சபை எல்லைக்குள் உள்ள எல்லா அரச அலுவலகங்களில் இப்பதவி ஒழிக்கப்படும் என்று முதலமைச்சர் சுசில் முனசிங்க தெரிவித்தார். (அ-எ)

கொழும்பில் நடந்த கருத்தரங்கில்

# பிராந்திய பத்திரிகையாளர் புறக்கணிப்புப் பற்றி பிரஸ்தாபம்

கொழும்பு. ஆக. 30

கொழும்பில் இலங்கை மன்றக் கல்லூரியில் தொடர்பு சாதனங்களும் சமூக அபிவிருத்தியும்'' என்ற தலைப்பில் பத்திரிகையாளர்கள் கலைஞர்களுக்கான 4 நாள் பயிற்சிக் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

வானொலி, தொலைக் காட்சி, பத்திரிகை நிறுவனங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 24 பேர் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்,

இக்கருத்தரங்கில் பிராந்திய பத்திரிகையாளர்கள் புறக்கணிப்பு தொடர்பாக சில பத்திரிகையாளர்கள் பிரஸ்தாபித்தனர்.

இறுதி நாள் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இயக்குநர் கலாநிதி டிவெசும் பெருமாபதி லளிக்சையில்.

அப்பகுதி சூழ்நிலை காரணமாக அவர்கள் அழைக்கப்படவில்லை. நிலமை சீரான பின்பு கொழும்பிலோ அல்லது அப்பிராந்தியத்திலோ இக்கருத்தரங்கு நடைபெறும். என்ருர் (ஓ-21)

குருநகர் சந்தையில்

# இறந்த ஆமைகளை வெட்டி விற்பனை செய்வதாகப் புகார்

குருநகர், ஆ. 30

இறந்த ஆமைகளை உணவுத் தேவைக்காக வெட்டி வியாபாரிகள் குருநகர் சந்தையில் விற்பனை செய்து வருவதாக புதிய சந்தை வர்த்தக சங்கத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்து குருநகர் புதிய சந்தை வர்த்தகர் சங்கம் மேற்படி வியாபாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுத்து வருவதாக சங்கச் செயலாளர் திரு. யோன் கிறிஸ்துராஜா தெரிவித்தார்.

மேற்படி விடயமாக யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதிக்குச் சங்கம் மகஜர் ஒன்றையும் சமர்ப்பிக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இறந்த ஆமைகளை வெட்டி உணவுத் தேவைக்கு விற்பனை செய்வதன் மூலமாக தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டு வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஒ- 51)

## பனம் பொருள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஆக, 30

சரவணை - சின்னமடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் எதிர் வரும் 3 ஆம் திகதி பனம் பொருள் செய்முறைக் கருத்தரங்கு ஒன்று நடைபெறும்.

பனம் பொருள் செய்முறை வல்லுநர்களும் சமூக சேவையாளர்களும் இந்தக் கருத்தரங்கில் கலந்து கருத்துரை வழங்குவார்கள். (உ-ஐ)

ஊரெழு கிராமத்தில்

# கசிப்புக் காய்ச்சுதலை நிறுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம். ஆக. 30

ஊரெழுக் கிராமத்தில் சட்ட விரோதமாக சாரயம் (கசிப்பு) காய்ச்சுதல் அதிகரித்து வருகிறது. சம்பந்தப்பட்டவர்கள் இதனை நிறுத்த வேண்டும்.

ஊரெழு பிரஜைகள் குழு இப்படி வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

அண்மையில் நடந்த மேற்படி பிரஜைகள் குழுவின் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

ஊரெழுக் கிராமத்தில் சட்ட விரோதமான முறையில் பெறப்படும் மின்சார பாவனையை உடன் நிறுத்துமாறு பொது மக்களிடம் வேண்டுகோள் விடுக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுமிடத்து அதனைப் பாவனையை நிறுத்த மின்சாரசபை அலுவலர்களுக்கு உதவ வேண்டும்.

சிறையில் வாடும் இளைஞர்களை விடுதலை செய்யும் பொருட்டு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவை நல்குதல்,

ஊரெழு கிராமத்தில் விவசாயிகளது பயிர்களை அழித்து வரும் கட்டாக் காலி ஆடு, மாடுகளைக் கட்டி வளர்க்குமாறு சம்பந்தப்பட்ட பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்தல்.

தவறினுல் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிவில் நிர்வாகம் குலைந்துள்ள இவ்வேளையில் வீண் சச்சரவுகளிலும் சண்டைகளிலும் ஈடுபடாது ஒற்றுமையாக வாழுமாறு பொது மக்களிடம் அன்புடன் வேண்டுகோள் விடுத்தல். (உ)

## சென். ஜோன்ஸ் படையினர் சேவை

யாழ்ப்பாணம், ஆக. 30

இப்போது நடைபெற்றுவரும் நல்லூர் உற்சவத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட சென் ஜோன்ஸ் முதலுதவிப் படையினர் சேவையில் ஈடுபட்டுவருகின்றனர்.

விசேட திருவிழாக் காலங்களில் முதலுதவிப்படையினர் அதிக அளவில் சேவையில் ஈடுபடுவார்களென இதற்குப் பொறுப்பாகவுள்ள நல்லூர்ப் படை அத்தியட்சகர் திரு. எஸ் கண்ணதாசன் தெரிவித்தார்.

இவருடன் உதவியாக நல்லூர்ப் படையின் நிறைவேற்று உத்தியோகத்தர் ஏ. கிருஷ்ணராஜா, பிரிவு அத்தியட்சகர் எஸ். ரவீந்திரன் ஆகியோர்கடமையாற்றி வருகின்றனர். (ஒ-க


Asanga Enterprises
A. வாசன்

மகிழ்ச்சியுடன் அறியத்தரும்
வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்

மிகவும் பாதுகாப்பான, நிச்சயமான
பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
குறுகிய காலத்துக்குள்
பிரயாணத்தை மேற்கொள்ளலாம்.

★ புறுணை
கிளீலோர்ஸ் US டொலர் 200
★ 3 வருட ஒப்பந்தம். உணவு, இருப்பிடம் இலவசம்.

★ சவூதி அரேபியா
மேசன் 500 SR
கம்பிவளைப்போர் 500 SR
கூலியாட்கள் 450 SR
வீட்டுச்சாரதி 450 SR
சுப்பமாக்கற் சேல்ஸ்மன் 400 SR

★ குவைத்
கிளீனேர்ஸ் 35 KD

★ சிங்கப்பூரில்
உடனடி வேலை வாய்ப்புக்கள்
சிங்கப்பூரில் உள்ள Chinese
SHIP YARD COMPANY க்கு
தொழிலாளர் உடன் தேவை. சம்பளம் 375 S. Dollar
மருத்துவம், தங்குமிடவசதி, இலவசம். 6 படத்துடன்
All Countries Passport, Passport Photostat
பிரதி 2 உடன் தொடர்பு கொள்ளவும்.
முற்பணம் அறவிடப்படமாட்டாது.

சிங்கப்பூரில் கண்ணியமான குடும்பத்திற்கு ஓர் அளவு
ஆங்கில அறிவுடைய பணிப் பெண்கள் தேவை.
சம்பளம் 225 S. Dollar
உணவு, இருப்பிடம், மருத்துவம் இலவசம்.
உடன் தொடர்பு கொள்ளவும்.
மலேசியா, புறுணை வேலைவாய்ப்புகளுக்கு பதிவு செய்தவர்கள்
காரியாலயத்துடன்
தொடர்பு கொள்ளவும்.

அசங்கா என்ரபிறைஸர்ஸ்
இல. 32, 5ஆம் குறுக்குத்தெரு,
(பிலிப்ஸ் நேசிங்ஹோமுக்கு எதிரே)
யாழ்ப்பாணம்.
(C-6446)



சவூதி அரேபியாவிற்கு
உடனடி
வேலைவாய்ப்பு

1. S. O. M. C
CLEANERS HOSPITAL
(1) ஆண்கள் 456 SR
(2) பெண்கள் 456 SR


2. AIR PORT
CLEANERS 400 + 100 SR
(ஆண்கள்)
வயது 21 — 49 வரை
பெண்கள்
வயது 30 — 45 வரை
இருவாரத்தில் பயணம்

KUWAIT
CLEANERS 30 KD
3 மாதத்திற்குள் பிரயாணம்
செய்யலாம்.
வயது 18 — 48 வரை

T. V. TRAVELS
& TOURIST
Kokuvil Station (Front)
Brown Road,
KOKUVIL.
(C-6410)



புரோட்டீன் நிறைந்த
புரோட்டீனெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர
புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும்
அவசியமான விற்றமின்களும் தாதுப்-
பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலை
ரூபா 68/55
125 கிறும்
Pfizer
®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் கட்சியாவதற்கு விண்ணப்பம்

புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியும் அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளது.

அதே நேரம் முஸ்லிம் லீக்கும் அரசியல் பிரிவை ஆரம்பிக்க வேண்டுமென லீக்கின் தலைமையகத்திடம் பல கிளைகள் குரல் எழுப்பியுள்ளனவாம்.

இது தொடர்பாக ஆராய்வதற்காக முஸ்லிம் லீக் தலைமையகத்தில் பொதுச்சபை கூட்டம்கூட்டப்பட்ட போதிலும் கோரமின்மையால் ஒத்திவைக்கப்பட்டது. (ஒ-21)

# நெடுந்தீவு படகுச்சேவையை சீர்படுத்துவதற்கு முயற்சி

## 'குமுதினி' படகு துரிதமாகத் திருத்தப்படுகிறது

நெடுந்தீவு, ஆக 30

நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகுச் சேவையைச் சீர்ப்படுத்தும் முயற்சியாக 'குமுதினி' படகை திருத்தியமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி போக்குவரத்துச் சேவையில் அரசாங்கத்தினால் ஈடுபடுத்தப்பட்ட ஒரேயொரு படகான 'குமுதினி'யும் அடிக்கடி பழுதுபடுவதால் இப்பகுதி மக்கள் பெரும் அவஸ்தைக்கு உள்ளாகி வருகின்றனர்.

தற்போது குமுதினி மோட்டார் படகை திருத்தியமைக்கும் முயற்சியில் யாழ் இயந்திரப் பொறியியலாளர் திணைக்களம் ஈடுபட்டிருக்கிறது.

''ஸ்ரேணிங் ரியூப்'' எனப்படும் படகின் மிக முக்கிய பகுதி சேதமுற்றதால் படகை கடலுக்கு மேலே இழுத்து அந்த வேலையை செய்யவேண்டியநிலை ஏற்பட்டிருக்கிறது.

காரைநகர் நீலங்காடு படகுகள் திருத்த நிலையம் செயல்களினால் பாதிப்புற்று இயங்காடியாதிருப்பதால் திணைக்கள அதிகாரிகள் அந்த இடத்திற்குப் பதிலாக வேறு ஒரு பகுதியில் குமுதினிப் படகை ஏற்றி அதைத் திருத்தும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

குமுதினிப் படகின் கூடாரமும் ஆட்டங்காணும் நிலையில் உள்ளதால் அதையும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

குமுதினிப் படகின் வேலைகள் பூர்த்தியானதும் அலையரசி மோட்டார்ப்படகின் புனரமைப்பு வேலைகளும் துரிதமாக ஆரம்பிக்கப்படும் எனவும் -

அப்படகை விரைவில் அனலைதீவுக்கான சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என்பதில் திணைக்கள உத்தியோகத்தர்கள் அக்கறைகொண்டுள்ளனர்என்றும் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-111)

## புதிய சட்டமா அதிபர்

கொழும்பு, ஆக. 30

புதிய சட்டமா அதிபராக திரு. எஸ். டபிள்யு. டி. வடுகொடப்பிட்டிய நியமிக்கப் படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. [ஒ-எ]

## கல்விநிதி மாதகல் மாணவிக்கு

பருத்தித்துறை, ஆக. 30

அன்னை ஸ்ரீ சாரதா தேவி கல்விநிதி, மாணவி செல்வி சி. சிவாஜினிக்கு வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் வருடந்தோறும் வழங்கப்படும் அன்னை ஸ்ரீ சாரதாதேவி கல்விநிதி இம்முறை மாதகல் என்னும் கிராமத்தைச் சேர்ந்த பின்தங்கிய பகுதி மாணவிக்குக் கிடைத்துள்ளது.

ரூபா 5000 செலவில் இம்மாணவி யாழ்ப்பாணக்கல்லூரியில் நடைபெறும் கொம்பியூட்டர் பயிற்சிபெற சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார். (ஒ-118)

# இனப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க சிறிமா அம்மையாராலேயே முடியும்

## ஸ்ரீ. ல. சு. க. முஸ்லிம் பிரமுகர் சொல்கிறார்

அம்பாறை, ஆக.30

இன்றைய இனப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துவைப்பதற்கு எமது ஸ்ரீ ல. சு. கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கஅம்மையாராலேயே முடியும். அவர் தமிழ்பேசும் மக்களுக்கு எதிரானவரல்லர் தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகளைப்பூர்த்தி செய்யும் அதேவேளை பெரும்பான்மை மக்களின் ஆதரவையும் பெறத்தக்கதான திட்டம் ஒன்றை அவர்வைத்திருக்கின்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாறை மாவட்டப் பிரதம அமைப்பாளரும் ஸ்ரீ ல. சு. க. முஸ்லிம் முன்னணியின் ஊவா கிழக்கு மாகாணப் பிராந்திய அமைப்பாளருமான சட்டத்தரணி ஜனாப் ஏ. எம். சம்சுதீன் மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனைக்குடி ஏழாம் வட்டாரத்தில் ஸ்ரீ ல. சு. கட்சியின் பிரசாரக்கருத்தரங்கு ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனை, சாய்ந்தமருது ஆகிய பகுதிகளிலுள்ள ஸ்ரீ ல. சு. க. கிளைகளின் தெரிவு செய்யப்பட்ட முக்கியஸ்தர்கள் இக்கருத்தரங்கில் பங்குபற்றினர்.

அமைப்பாளர் ஜனாப் சம்சுதீன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

'இனப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து வைக்கமுடியாது இன்றைய அரசு திண்டாடுகின்றது. இதற்கான நல்ல தீர்வும், திட்டமும் இல்லாமையேஇதற்குக் காரணமாகும்.

எனவே இன்றைய அரசை மாற்றி மக்கள் எமது கட்சியிடம் ஆட்சிப் பொறுப்பைத் தந்தால் எமது தலைவி திருமதி பண்டாரநாயக்கா இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பார்.

இந்த நாட்டில் இன்று நிலவும் அமைதியின்மையைப் போக்கி ஓர் சமாதானமானதும், பாதுகாப்பானதுமான நிலையை ஏற்படுத்துவதென்றால் அது அம்மையாரால்தான் முடியும்.

ஸ்ரீ லங்கா சு. கட்சி ஆட்சிக்கு வந்தால் தேர்தல் முறையை மாற்றுவதோடு. தொகுதிவாரியான தேர்தல்முறையை மீண்டும் கொண்டுவரும். இதனால் மிகப் பயனடையப்போவது முஸ்லிம் சமூகமே'.

இவ்வாறு அவர் கூறினார்.

அக்கரைப்பற்று ஸ்ரீல. சு. க. அமைப்பாளர் ஜனாப் முகைடீன், சட்டத்தரணி ஜனாப் ஏ. ஏ. லத்தீப், டாக்டர் ஜனாப் சரீப் ஆகியோரும் உரையாற்றினர். (ஒ-14)

அஷ்டலக்ஷ்மி கலண்டர்

தமிழ் மாநிலத்தின் உன்னத தயாரிப்பு!

1989ம் ஆண்டு அஷ்டலக்ஷ்மி தினத்தாள் கலண்டருக்காக ரூபா 35/- அனுப்பிப் பதிவுசெய்பவர்களுக்கு 365 பொது அறிவுக் களஞ்சியங்கள் அடங்கிய "பொது அறிவு டயறி" அன்பளிப்பாக வழங்கப்படும்!

★ வீட்டுக்கு அழகுதரும் தெய்வீகப் படங்கள்
★ தவறு இல்லாத பஞ்சாங்ககுறிப்புகள்
★ நாள்தோறும் சுபநேரம், எமகண்டம், ராகு காலம் போன்ற குறிப்புகள்
★ பொது அறிவை விருத்திசெய்யும் பொன்மொழிகள் ஆகியன அடங்கியது.

TRADE MARK

தயாரிப்பாளர்: சிவா பிறின்ரேர்ஸ், த.பெ.1, கைதடி.

சித்திரங்கள்: ஞானம் ஆர்ட்ஸ் அன் அட்வடைசிங்ஸ்

நல்லை ஆதீனத்திலுள்ள கலண்டர் காட்சிச்சாலையிலும் பதிவுசெய்து அன்பளிப்பைப் பெற்றுக்கொள்ளலாம். (C-6416)

# கிளிநொச்சி மாவட்டத்தில் ஐந்து பாடசாலைகளை புனரமைக்க நிதி உதவி

## ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும்

யாழ்ப்பாணம், ஆக 30

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஐந்து பாடசாலைகளின் புனரமைப்பிற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவி கிடைக்கவிருக்கிறது.

கல்வி அமைச்சின் சிபார்சின் பேரில் பின்வரும் ஐந்து பாடசாலைகள் இந்த நிதி உதவியைப் பெற்றுக் கொள்ளவிருக்கின்றன.

★ கிளிநொச்சி மகாவித்தியாலயம்.
★ பூநகரி மகாவித்தியாலயம்.
★ இயக்கச்சி அ. த. க. பாடசாலை.
★ அக்கராயன் அ. த. க. பாடசாலை.
★ கிளிநொச்சி அ. த. க. பாடசாலை

மேலும் பாடசாலை உபகரணங்களுக்கென கல்விச் சேவைகள் அமைச்சு 5 லட்சம் ரூபாவையும். ஆசிய அபிவிருத்தி வங்கி ஒரு லட்சம் ரூபாவையும் வழங்கியுள்ளன. (ஒ-9)

## கழிவுப் பணம் மீளளிப்பு

மன்னார். ஆக. 30

மன்னார் கல்வித் திணைக்களம் 400 இற்கும் அதிகமான ஆசிரியர்களின் கடன் சபைக் சழிவுப் பணத்தை மீளளிப்பதற்குதுரித நடவடிக்கை எடுத்து வருகிறது. இன்னும் சில வாரங்களில் மீளளிப்பு செயற்பாடுகள் பூர்த்தியடைந்து விடும் என்றும் தெரிவிக்சப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் வவுனியா மாவட்டத்திலும் சேவையாற்றிய சுமார் 200 ஆசிரியர்களின் களிக்கப்பட்ட பணம் குறித்த விபரங்கள் கிடைக்கப் பெற்றால் அவற்றையும் திருப்பிச் செலுத்த முடியுமென்று தெரிவிக்கப்பட்டது. (உ)

# 10 லட்சம் பேருக்கு வேலை; பிரதமரின் திட்டம் ஏற்பு

கொழும்பு, ஆக. 30

பத்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம் நேற்று நடந்த அரசாங்கக்குழுக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பிரதமர் பிரேமதாஸ இத்திட்டத்தைச் சமர்ப்பித்தார்.

இத்திட்டத்தின் படி, இந்த ஆண்டின் இறுதிக்குள் 1 லட்சத்து 15 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்.

அடுத்த இரண்டு ஆண்டுகளினுள் சுமார் 8 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்சப்படும்.

இத் திட்டத்தை சமர்ப்பித்துப் பேசுகையில் பிரதமர் சொன்னதாவது;

அடுத்த நான்கு மாதங்களுக்குள் 1 லட்சத்து 15 ஆயிரம்பேர் வேலை பெறுவர்.

பொலிஸ் சேவைக்கு 16 ஆயிரம்பேரும், அரசாங்க சேவைக்கு 5 ஆயிரம்பேரும், ஆசிரியர்களாக 10 ஆயிரம்பேரும், தாதிகளாக 5 ஆயிரம் பேரும் புதிதாக இத்திட்டத்தின்கீழ் நியமனம் பெறுவர்.

கிராம மட்ட வளர்ச்சிப் பணிகளுக்கு நிதி வழங்கும் முகவர்களை நியமிக்க இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் முடிவு செய்துள்ளன.

இலங்கை வங்கி மட்டும் 14 ஆயிரம் முகவர்களை நியமிக்க இருக்கிறது.

உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மாணத் துறை அமைச்சின் கீழ் 20 ஆயிரம்பேர் வேலைவாய்ப்புப் பெறுவர்.

கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இன்னும் 20 ஆயிரம் பேர் நியமிக்கப்படுவர்.

வேறு அமைச்சுக்களும் புதிதாக வேலைவாய்ப்பளிக்க சம்மதம் தெரிவித்துள்ளன.

புதிய வேலைவாய்ப்புக்களுக்கு தேவையான நிதிஒதுக்கீட்டைப் பெற திறைசேரியுடன் பேச்சுக்கள் நடத்த ஜனாதிபதி ஜெயவர்த்தன அமைச்சர் லலித் அத்துலத்முதலி, எஹலியகொட எம் பி. விமல் விக்ரமசூரியா ஆகியோரை நியமித்திருக்கிறார்.

இப்படி பிரதமர் தெரிவித்தார். (ஒ-எ)

# ஆசிரியைகளின் பயிற்சி பாலருக்குப் பயன்பட வேண்டும்

சாவகச்சேரி, ஆக 30

பாலர் பாடசாலை ஆசிரியைகள் பெறும் பயிற்சிகள் வகுப்பறைகளில் பாலர்களுக்கு நல்ல முறையில் பயன்பட வேண்டும். விடுமுறை காலம் இப்பயிற்சிகளால் பயனுடையதாகக் கழிந்தது.

ஆசிரியைகள் பாலர்களின் இப்பருவத்திலேயே அறவழிச் சிந்தனை, செயற்பாடு ஆகியவை வளரவழி காட்ட வேண்டும். வேதனத்துக்கான தொழிலாகக் கருதாது புதிய சமுதாயத்தை அமைக்க மேற்கொள்ளும சேவையாக மதிக்க வேண்டும்.

இவ்வாறு அறவழிப் பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான பயிற்சியின் இறுதி நாளன்று தலைமை வகித்து உரையாற்றிய அறவழிப் போராட்டக் குழுவின் தலைவர் திரு. வி. எஸ். துரைராசா கூறினார்.

கைதடி நவீல்ட் பாடசாலை துணை அதிபர் திரு. கே. கோபாலகிருஷ்ணன், அதிபர் திரு.எஸ். நாகராசா, ஆசிரியை செல்வி கிரிசா பரமசாமி, வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. சோமசுந்தரம், ஆசிரியர் திரு.எஸ். கண்மணி ஆகியோர் சிறப்புரைகள் வழங்கி பயிற்சிகளை நெறிப்படுத்தினர்.

45 ஆசிரியைகள் இப்பயிற்சியில் பங்கு பற்றினர். (ஒ-31)

# பணத்தினால் சாதிக்க முடியாததை மனித பலத்தினால் சாதிக்க முடியும்

## சுவாமி ஜீவானந்தஜீ உரை

மட்டக்களப்பு, ஆக. 30

பணத்தினால் தான் சேவை செய்ய முடியும் என்ற ஒரு கருத்து இன்று நிலவுகிறது. பணத்தினால் சேவை செய்ய வேண்டிய அவசியமில்லை. மனித பலத்தினால் தான் சேவையாற்ற முடியும். பணத்தினால் சாதிக்க முடியாதவற்றை மனித பலத்தினால் சாதிக்க முடியும்.

இவ்வாறு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் முதல்வர் சுவாமி ஜீவானந்தஜீ இந்துஇளைஞர் மன்றம் - இந்து மகளிர்மன்றம் இணைந்து நடாத்திய பாராட்டு விழாவிற்கு நன்றி தெரிவித்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

22 வருடம் சேவையாற்றிய சுவாமி ஜீவானந்தஜீ இராமகிருஷ்ண மிஷன் தலைமையகம் (வேலூர்) செல்வதை முன்னிட்டுஇப்பாராட்டு விழாவும் வழியனுப்பும் வைபவமும் நடைபெற்றது.

இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் தலைவர் திரு. எம். சிவநேசராஜா தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

அவர் மேலும் கூறியதாவது: மட்டக்களப்புப் பகுதியில் நான் பல சேவைகள் செய்ததாகப் பலரும் புகழ்ந்தனர். என் கடமையைத்தான் நான் செய்தேன். இதனால் இப்பெருமைக்கு நான் உரியவனல்ல.

எமது மக்கள் சகலரும் சேவையை எதிர்பார்க்கிறார்கள். ஆனால் சேவைக்கு ஒத்துழைப்பு நல்க எவரும் தயார் இல்லை. இந் நிலைமை மாற்றமடைய வேண்டும்.

இவ்வாறு அவர்கூறினார் மற்றும் சுவாமி ராஜேஸ்வரானந்தாஜீ அரச அதிபர் திரு. ம. செல்வரத்தினம், திரு. வ. சிவசுப்பிரமணியம், திரு. [illegible] செல்வநாயகம் ஆகியோர் பாராட்டுரை யாற்றினர். (ஒ-21)

## ப. நோ. கூ. சங்க முகாமையாளர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு ஆக. 30

வேலைக்கு செல்லும் வழியில் இனந்தெரியாத நபரால் சைக்கிளில் ஏற்றிச் செல்லப்பட்ட ப. நோ. கூ. சங்க கிளை முகாமையாளர் ஒருவர் சில நிமிடங்களில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இச் சம்பவம் அண்மையில் களுவாஞ்சிக்குடியில் இடம்பெற்றது.

அதேயிட வாசியான எஸ். நவநாயகம் (39) என்பவர் தான் இந்நபராவார் (ஒ-21)

VACANCIES IN SAUDI ARABIA

We require the following Categories of personal for immediate recruitment.

| CATEGORY | SALARY |
|---|---|
| 1. Auto Electrician | 650+150 FA |
| 2. Mechanic (Desiel & Petrol) | 650+150 FA |
| 3. General Electrician | 750+150 FA |
| 4. Civil Supervisor | 900+200 FA |
| 5. Heavy Equipment Crane Mechanic | 800+100 FA |
| 6. Hvac Technician | 900+100 FA |
| 7. Air Compressor Mechanic | 900+100 FA |
| 8. Technical Manager | — Negotiable |
| 9. Electrician/Electrical Supervisor | — Negotiable |
| 10. Mechanical Supervisor | — Negotiable |
| 11. Telephone Technician | — Negotiable |
| 12. Electronic Supervisor | — Negotiable |

Diploma of I.T.I. Certificates with five (05) years experience.


CALL OVER IN PERSON IMMEDIATELY with Documents and Passport.

T. V. Travels & Tourist

Brown Road, (Railway Station Front) KOKUVIL.

(C 6432)

## 4ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



கைதடியைச் சேர்ந்த செல்வன் சின்னத்தம்பி ஜெயந்திரன்

தோற்றம்: 10 - 4 - 1963 மறைவு: 10 - 9 - 1984

எமது குல விளக்கே நீர் ஆவலோடு தாய் சகோதரங்களை பார்க்க வந்தவேளை வவுனியாவில் அரக்கர் கையில் அகப்பட்டு எங்களை விட்டு ஆண்டவன் சன்னிதானம் சென்று விட்டீரோ. நீர் எங்களை விட்டு நாலு ஆண்டுகள் ஆகி விட்டன. உமது நினைவு எங்களை விட்டு அகலாது. உமது ஆத்மா சாந்திக்கு எந்நாளும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், சகோதரங்கள், மாமன்மார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

(6020)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25-02-1923

மறைவு 23-08-1986

திதி 30-08-1988

அமரர் கந்தையா இரத்தினகோபால் அவர்கள்

(Ex-Supdt, of Arsleena Estate, Ginikathena C. E. O. Milk White)

எம் அன்புத் தெய்வமே!

உங்கள் பூதவுடல் அழிந்தாலும், வஞ்சமில்லா பூ முகமும், கள்ளமில்லா வெள்ளையுள்ளமும் என்றென்றும் எம் இதயத்தை விட்டகலா. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி!

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

''லக்சுமி வாசம்'' யாழ்ப்பாணம்.

(C 6441)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

கொளற்கரிதாய் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீரது அரண்.

**பொருள்:**

பகைவரால் கைப்பற்றப்படுவதற்கு முடியாததாய், தன்னிடம் உணவுப்பொருள் கொண்டதாய், உள்ளிருப்போர் நிலைத்திருப்பதற்கு எளிதாகிய தன்மை உடையது அரண்.

உதயன்
உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
30-08-1988 த. பெ. இல. 23

# முதற் படியைத் தாண்ட வேண்டாமா?

இலங்கை - இந்திய ஒப்பந்தப் பிரகாரம் இலங்கையின் ஏழு மாகாணங்களிலும் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டு விட்டன. வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் மட்டும் நடக்கவில்லை.

வருட இறுதியில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பதாக, விடுபட்ட மாகாணசபைத் தேர்தலை நடத்திவிட வேண்டும் என்பதில் இலங்கை அரசு அக்கறையாக இருந்தது.

இப்போது அந்த அக்கறை சற்றுக் குறைந்து, ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதிலேயே அதிக ஆர்வம் காட்டப்படுவதாகத் தெரிகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தலைப் பார்த்திருக்காமல், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது என்ற போக்கும் ஆளுங் கட்சி வட்டாரங்களில் வலுத்து வருவதாக அறியப்படுகிறது.

ஆனால் இந்தியத் தரப்பில். வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் கூடுதல் அக்கறை காட்டப்படுகிறது. ஏதோ ஒரு விதத்தில் தேர்தலை நடத்திவிட்டால் சனநாயக முறையை நிலைநாட்டலாம், வன்செயலைக் கட்டுப்படுத்தலாம் என அது நம்பக்கூடும்.

ஆனால் அமைதியும் பாதுகாப்பும் இல்லாத சூழ்நிலையில் தேர்தல் ஒன்றை நடத்துவதானால் அது சுதந்திரமான தேர்தலாக இருக்கமாட்டாது என்பது நிச்சயம். அது திணிக்கப்பட்ட தேர்தலாகவே இருக்கும் என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

இப்போதைய சந்தர்ப்பத்தில் அதாவது அமைதியும், சகஜநிலையும் இல்லாத ஒரு சூழ்நிலையில், வடக்கு கிழக்கில் தேர்தல் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தும் என்று பேராசிரியர் ரால்ப் புல்ஜன்ஸ் தெரிவித்திருக்கிறார்.

இதே கருத்தை வலியுறுத்துவது போல, முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயலாளர் அல்ஹாஜ் எம். ஐ. எம். மொஹிதீனும் கருத்து வெளியிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சண்டையும், பதற்றமும் நீங்கி, அமைதி ஏற்பட்டு நிலைமை சீராகுமுன்னர் அங்கு எந்த ஒரு தேர்தலும் நடைபெறக் கூடாது. தேர்தல் நடத்தப்படுமானால் அது அரசுக்குரிய, அதற்குச் சாதகமான தேர்தலாகவே அமையும். மக்களுக்கான தேர்தலாக அமையாது. இவ்வாறு அல்ஹாஜ் மொஹிதீன் மிகத் தெளிவுபடக் கூறியுள்ளார்.

இந்தக் கருத்தே வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களில் மிகப் பெரும்பாலானவர்கள் மத்தியிலும் நிலவுவதை அவதானிக்க முடிகிறது.

எனவே தேர்தல்களை நடத்துவதற்கு முன்னர் தமிழ்ப் பகுதிகளில் அமைதிச் சூழ்நிலை ஏற்படவேண்டும். மக்கள் அச்சமின்றியும், நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும் வாழ வழி ஏற்பட வேண்டும். அப்படி ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டால் மட்டுமே மக்கள் தமது வாக்குரிமையைச் சுதந்திரமாகப் பாவிக்க முடியும்.

வாக்குரிமையைப் பாவிப்பதற்கு, தமக்குரிய ஏனைய உரிமைகள் சரியாகக் கிடைக்கின்றனவா, கிடைக்குமா என்பனவையும் மக்கள் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கும்.

அமைதிச் சூழ்நிலை ஏற்படுவதற்கு சண்டை சச்சரவுகள் ஒழிய வேண்டும். சண்டை சச்சரவுகள் ஒழிய அதில் ஈடுபட்டிருக்கும் இரு சாராரும் விட்டுக்கொடுத்துப் பேசவேண்டும், மனம் திறந்து பேசவேண்டும். பேச்சு நடப்பதற்கு யுத்த நிறுத்தம் மிக அவசியம்.

ஆகவே தேர்தலை நடத்த முதற் தேவை யுத்தநிறுத்தம்; அந்த முதற் தேவையைப் பூர்த்தி செய்தால் மட்டுமே படிப்படியாகத் தேர்தலை நடத்தக்கூடிய, மக்கள் வாக்களிக்கக்கூடிய நிலையை எட்டிப்பிடிக்கலாம்.

எனவே தேர்தல் குறித்து அவசரப்படும் முன்னர் யுத்த நிறுத்தம் என்ற முதற்படியைத் தாண்டுவது அவசியமும், அவசரமும் ஆகிறது.

இலங்கை அரசானாலும் சரி இந்திய அரசானாலும் சரி தேர்தலை நடத்த நினைக்க முன்னர் முதலாவது படியை மனதில் கொள்வார்களாக!

# பலஸ்தீனியரை பாதுகாக்குக! ஐ. நாவிடம் கோரிக்கை

ஜெனிவா, ஆக. 29

இஸ்ரவேலினால் கைப்பற்றப்பட்டுள்ள காஸா, மேற்கு கரைப்பிரதேசங்களில் வாழும் பலஸ்தீனியர்களைப் பாதுகாக்கும்படி ஐ. நா. வுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசிர் அரபாத், ஐ. நா. பொதுச்செயலாளர் பெரெஸ்டி குயிலரைச் சந்தித்து இவ்வேண்டுகோளை விடுத்தார்.

அரபாத், திரு குயிலரை ஜெனிவாவில் சந்தித்துப் பேசியபோது இவ்வேண்டுகோளை விடுத்தார்.

இருவரும் பலஸ்தீனப் பிரச்சினை குறித்து நீண்ட நேரம் பேசினர். நான்கு அம்சங்கள் முக்கியமாக அப்போது விவாதிக்கப்பட்டன என்று ஐ. நா. பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் பலஸ்தீனர்களைப் பாதுகாப்பதில் ஐ. நா. அதிகபங்கு வகிக்க வேண்டும் என்று அரபாத் அப்போது கேட்டுக்கொண்டார்.

ஆவன செய்வதாக பொதுச்செயலாளர் பதிலளித்தார்.

பலஸ்தீனியர் மீது இஸ்ரவேல் நடத்தும் அடக்கு முறைகளைக் குறித்து கவலை தெரிவித்து ஐ. நா. பாதுகாப்புச்சபை ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. (எ)

ஸியா மரணத்தின் பின்னர்

# பாகிஸ்தானில் இருந்து தினமும் 1,500 இந்தியர் வெளியேற்றம்!

புதுடில்லி, ஆக.29

அதிபர் ஸியா - உல் ஹக்கின் மரணத்தைத் தொடர்ந்து தினமும் ஆயிரக் கணக்கில் பாகிஸ்தானில் இருந்து இந்தியர்கள் வெளியேறி வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

சராசரி 1, 500 பேர் எல்லையைத் தாண்டி இந்தியா செல்கின்றனர்.

ஸியாவின் மரணத்துக்குக் காரணம் இந்தியாவும் சோவியத்யூனியனும் செய்த கூட்டுச்சதி தானென்று பாகிஸ்தானில் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

இதனால் அங்கு இந்தியாவுக்கு எதிரான குரோத உணர்வு உச்சக் கட்டத்தை அடைந்து இருக்கிறது.

பாகிஸ்தானில் பல்வேறு நகரங்களில் இந்திய எதிர்ப்பு ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன.

இதனால் பீதியடைந்த இந்தியர்கள் வெளியேறுகின்றனர்.

இந்தியாவின் வடமேற்கு எல்லையில் உள்ள அத்தாரி, நாகா ஆகிய இடங்களினூடாகத்தான் இருநாடுகளுக்கும் இடையேபோக்குவரத்து உள்ளது. (எ)

## வளை குடாப் பேச்சில் நெருக்கடி; ஐ. நா. செயலர் அறிவிப்பு

ஜெனிவா, ஆக. 29

வளைகுடா சமரசப் பேச்சுக்களில் நெருக்கடி நிலைதோன்றியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. எதிர்பாராதவிதமான கஷ்டங்கள் ஏற்பட்டிருப்பதாக ஐ. நா. பொதுச்செயலாளர் பெரெஸ் டி குயிலர் தெரிவித்தார்.

திரு குயிலர் தலைமையில் ஈரான், ஈராக் நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் நேரடிப் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

முதல் அம்சமாக இரண்டு நாடுகளும் தங்கள் துருப்புக்களை சர்வதேச எல்லைக்கு நகர்த்த வேண்டும் என்பது பற்றி விவாதிக்கப்பட்டு வருகிறது.

சர்வதேச எல்லை எது என்பதிலேயே இரு நாடுகளுக்கும் இடையில் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. (எ)

## தூரதர்ஷனில் மீண்டும் ராமாயணம்

சென்னை, ஆக 29

இந்திய தூரதர்ஷனில் தீபாவளி முதல் மீண்டும் ராமாயணம் தொடர் காட்டப்படவுள்ளது.

ராமாயண தொடர் தயாரிப்பாளரும் டைரக்டருமான ராமானந்த சாகர் இத்தகவலை தெரிவித்தார்.

26 வாரங்கள் இத்தொடர் ஒளிபரப்பு இடம் பெறும் என்று அறிவிக்கப்படுகிறது (எ)

## உலகப் பணக்காரர்

நியூயார்க், ஆக. 29

உலகின் மிகப்பெரிய பணக்காரர் என்ற பெருமையை புருணை சுல்தான் பெறுகிறார்.

அவரின் ஆண்டு வருமானம் 2 ஆயிரத்து 500 கோடிடாலர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

போர்ச்சூன் சஞ்சிகையில் இத்தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது.

எண்ணெய் விலை குறைந்தாலும், அவர் இவ்வருமானத்தை எண்ணெய், நிலவாயு விற்பனையால் பெறுகிறாராம். (ஒ-எ)

## ஏவுகணைகள் அழிப்பு!

மாஸ்கோவில் இருந்து 600 மைல் தொலைவில் உள்ள விமானத் தளத்திற்கு அருகில் வைத்து மூன்று ஏவுகணைகளை சோவியத் யூனியன் அழித்தது.

இதனை அமெரிக்க அரசு விஞ்ஞானிகள், அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் பார்வையிட்டனர்.

நடுவானில் சாகஸம் புரிந்த

# மூன்று ஜெட் விமானங்கள் மோதி நொருங்கின! 51 பேர் பலி; 100க்கு மேற்பட்டோர் காயம்!!

நடுவானில் மூன்று ஜெட்விமானங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி வெடித்துச் சிதறி விழுந்ததில், 51 பேர் உயிர் இழந்தனர்.

இப்பயங்கர சம்பவம் நேற்று மேற்கு ஜெர்மனியின் தெற்கு நகரம் ஒன்றில் இடம்பெற்றது.

நேட்டோவின் தலைமைக் காரியாலயத்தை ஒட்டியுள்ள விமான நிலையத்தில் அமெரிக்க, பிரெஞ்சு ஜெட்விமானங்கள் சாகஸ நிகழ்ச்சிகளைக் காட்டிக்கொண்டிருந்தன, அப்போது சுமார் 30 ஜெட்விமானங்கள் அணிவகுத்து வந்து கொண்டிருந்தன.

ஆயிரக் கணக்கான பொதுமக்கள் அண்ணந்து பார்த்தபடி இருந்தனர்.

திடீரென்று 300 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த அமெரிக்க, பிரெஞ்சு ஜெட் விமானங்கள் ஒன்றுடன் ஒன்று நடுவானில் மோதிக்கொண்டன. அச்சமயம் அங்கு வந்த இத்தாலிய விமானம் ஒன்றும் மோதிக் கொண்டது.

மூன்று விமானங்களும் முட்டி மோதிக் கொண்டு பயங்கர வெடிச்சத்தத்துடன் நடுவானில் வெடித்துச் சிதறிக் கீழே நின்ற மக்கள் கூட்டத்தின் மேல் விழுந்தன.

மூன்று விமானமோட்டிகளும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

பொதுமக்கள் பலரும் உயிரிழந்தனர்: நூற்றுக் கணக்கானோர் காயம் அடைந்தனர். (எ)

வடக்கு, கிழக்கில்

# நிலைமைசீராகுமுன் தேர்தலா?

## அது அரசின் தேர்தலாகவே அமையும்

### மு. ஐ. விடுதலை முன்னணிச் செயலாளர் சொல்கிறார்

கொழும்பு, ஆக. 30

வடக்கு, கிழக்கு மாகாணங்களில்சண்டை பதற்றம் நீங்கி அமைதி ஏற்பட்டு நிலைமை சீராக முன்னர், எந்த ஒருதேர்தலும் நடைபெறக் கூடாது தேர்தல் நடைபெறுமானால் அது அரசுக்குரிய தேர்தலாகவே அமையும் தவிர மக்களுக்கான தேர்தலாக அமைய மாட்டாது.

மேற்கண்டவாறு முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயலாளர் நாயம் அல்-ஹாஜ் எம் ஐ எம் மொஹிதீன உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அல்-ஹாஜ் மொஹிதீன் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

இராணுவ நிர்ப்பந்தத்துடன் நடைபெறும் தேர்தல் மக்கள் பிரதிநிதிகளை சுதந்திரமாகத் தெரிவு செய்யும் தேர்தலாக அமையமாட்டாது.

இந்தியாவின் நோக்கத்திற்காக இலங்கை மக்கள் வாக்குப்போட முடியாது. அதேபோல இலங்கைச் சிங்களப் பேரினவாதிகளின் அச்சுறுத்தலுக்காக தமிழ்பேசும் தமிழர், முஸ்லிம்கள் வடக்கு, கிழக்கில் வாக்களிக்க முடியாது. நிலைமை சீரான பின்புதான் எந்த ஒரு தேர்தலும் இப்பகுதிகளில் நடைபெறல் வேண்டும்.

எம்மைப் பொறுத்தவரை தமிழீழ விடுதலைப் புலிகளுடன மட்டுமின்றி எமது மக்களின் முன்னேற்றம், பிரதேச அபிவிருத்தி சம்பந்தமான கொள்கைகளை யார் ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்களுடன் ஒத்துழைக்கத் தயார். ஆனால் எக்காரணம் கொண்டும் தனித்துவம், இன உரிமை ஆகியவற்றை விட்டுக் கொடுக்க நாம் தயார் இல்லை.

ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரை, எமது கல்வி, கலாசாரம், உரிமை, பாதுகாப்பு என்பவற்றுக்கு நியாயமான பங்கு வழங்கும் வேட்பாளர்களுக்கு நாம் ஆதரவு வழங்குவோம்.

இனரீதியான மாகாண சபை வழங்க பலம் வாய்ந்த கட்சிகளான ஸ்ரீ. ல. சு. கட்சிபோ அல்லது ஐ தே க.போ முன்வராது இந்நிலையில் கிடைக்காதவற்றை முஸ்லிம் காங்கிரஸ் கேட்பதால் பயன் இல்லை- என்றார். (அ-21)

## பூரணை விழா நடந்தது!

காங்கேசன்துறை, ஆக. 30

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி வளவில் அமைந்துள்ள புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் சனியன்று பூரணை விழா வழமை போல் நடந்தது.

சனியன்று காலை அங்கு செல்லவும், விழா நடத்தவும் அமைதிப்படையினர் அர்ச்சகரையும், மங்கள வாத்தியம் இசைப்போரையும், அடியார் களையும்தடுத்தனர்.

ஆனால் பிற்பகல் யாழ் அரச அதிபருக்கு இவ்விடயத்தைத் தெரியப் படுத்தவே அவர் அமைதிப்படை உயர் அதிகாரியுடன் பேசி ஆலயத்தில் பூரணை விழா நடத்த ஏற்பாடு செய்தார்.

அமைதிப் படையினரும் இதில் கலந்து வழிபாடு செய்தனர். (ஒ-68)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### மங்கையர் மடிநடந்த நல்லைநகர்க் குகனே!

ராகம்:- ரஞ்சனி தாளம்:- ஆதி

பல்லவி

வேலென்றும் வினைவோட்டும் மயிலென்றும்-
எனைக்காக்கும்!
வேறென்ன வேண்டும் எனக்கு — மனமே!!
[வேலெ......]

அனுபல்லவி

கங்கையிலே தவழ்ந்து பொய்கையிலே
வளர்ந்து
மங்கையர் மடிநடந்த நல்லைநகர்க் குகனே
[வேலெ......]

சரணம்

வலையெனப் பிணைந்துவரும் பிணியைப்
போக்கிடுமே!
அலையெனக் கிளர்ந்துஎழும் இடரைத்
தீர்த்திடுமே!!
மலையென நிமிர்ந்து வரும் துயரைச்
சாய்த்திடுமே!
தொலையென முனைந்துவரும் எதையும்
ஓட்டிடுமே!!
[வேலெ......]

— முருகு

## சித்திரத் தேர் அச் சேற்று விழா

சாவகச்சேரிஆக 30

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் புதிய சித்திரத் தேருக்கான அச்சேற்று விழாவானது கடந்த வியாழன்று நடைபெற்றது.

விநாயக வழிபாடு, அனுக்ஞை, துர்க்கை அம்மனுக்கு விசேட ஆராதனை ஆகியவற்றைத் தொடர்ந்து அச்சேற்றும் வைபவம் நடைபெற்றது.

சிவாகம ஞானசாகரம் சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள், சிவஸ்ரீபரராசசேகரக் குருக்கள் ஆகியோர் முன்னின்று நடத்தினர். (ஒ-31)

## கதிர்காமம் அழகுராணியை கொலை செய்தவருக்கு கப்புகமவில் 'மரண தண்டனை'

கொழும்பு, ஆக 30

கதிர்காமம் அழகுராணி பிரேமாவதி மனம்பேரியைக் கொலை செய்ததற்காக சிறைத் தண்டனை அனுபவித்த பின்னர் விடுதலையான இராணுவ சார்ஜண்ட் அமரதாஸரத்னாயக்கா என்பவர் இனந்தெரியாத ஒருவரால் குத்திக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தெவிநுவரத் தொகுதியில் கப்புகமவில் உள்ள அவரது வீட்டுக்கு எதிரில் வைத்தே இடம் பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

1971 கிளர்ச்சியின் போது அழகுராணி மனம்பேரி இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டாள் என்பது தெரிந்ததே. (ஒ-எ)

### உணவு முத்திரை பற்றாக்குறை

கோப்பாய் ஆக 30

வலி கிழக்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆயிரம் குடும்பங்களுக்கு விநியோகிப்பதற்கு உணவு முத்திரை பற்றாக்குறையாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-72)

## ஆயுள்வேத மருந்துவகைகள் வந்து சேர்ந்தன

சுழிபுரம், ஆக, 30

சுழிபுரம் பிரதேச சபை அபிவிருத்தி உப அலுவலகம் நடத்தும் ஆயுள்வேத வைத்தியசாலைக்கு வேண்டிய மருந்து வகைகள் ஆயுள்வேதக் கூட்டுத்தாபனத்தால் அனுப்பி வைக்கப்பட்டுளளது.

நோயாளர்கள் இந்த மருந்து வகைகளைத் தினமும் விடுமுறை நாட்களைத் தவிர்ந்த தினங்களில் வந்து பெற்றுச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது இலவச வைத்தியசாலை பிரதேச சபையின புதிய கட்டடத்தின் கீழ் செயற்பட்டு வருகின்றது. (உ-28)

## இறைவன் அருள்பெற இசையே மருந்து

### கல்வியதிகாரி உரை

வாழ்வுக்கு இன்பம் தருவது இசை. இன்னல்கள் பல ஏற்பட்டாலும் தொல்லைகள் பல குறுக்கிட்டாலும் நாம் இசையைக் கற்போம். இன்னிசையால் மகிழ்வோம். இறை அருள் பெறவும் இசைதான் மருந்தாகும். எமது வருங்காலச் சமுதாயம் சிறப்பாக அமைய இன்னிசையை யாவரும் கற்கவும் - ரசிக்கவும் வழி அமைப்போம்.

இவ்வாறு சங்கீத வித்தியாதிகாரி திரு. என். கணபதிப்பிள்ளை வட்டுக்கோட்டை வட்டார ரசிகர் அமைப்பு நடத்திய இன்னிசை விழாவில் கலந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த விழா அண்மையில் வழக்கம்பரை அம்மன் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது. சங்கீதபூஷணம் கே. நடராசாவின் இன்னிசை நிழ்ச்சியும் நடைபெற்றது. (உ- 28)

## இலவச ஆங்கில வகுப்பு

வதிரி தமிழ் மன்றம் பாடசாலையை விட்டு விலகிய யுவதிகளுக்கான இலவச ஆங்கில வகுப்பொன்றை ஆரம்பித்துள்ளது.

இவர்களுக்கான விரிவுரைகளை திரு. டி. ஏ. நைல்ஸ், திரு. எம் எஸ். சினித்தம்பி, திரு. ரி. இரத்தினசிங்கம், திரு. சி. இராசநாயகம் ஆகியோர் கூட்டாக மேற்கொண்டு வருகின்றனர். (ஒ - 118)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த முறையில்
✶ குளிர்சாதனப் பெட்டிகள்
✶ குளிரூட்டிகள்
திருத்திக்கொள்ளவும்
எலெக்ரோ-ரேவ்-கூல் எஞ்சினியர்
கொக்குவில் சந்தி, கொக்குவில்.



# உதயன்

30 - 08 - 1988 செவ்வாய்க்கிழமை



ரீ.வி., டெக், றேடியோ திருத்தவும்,
புதிய பாடல்களைப் பதிவு செய்யவும்
எலெக்ரோ-ரேவ்-கூல் எஞ்சினியர்
கொக்குவில் சந்தி, கொக்குவில்.
அத்துடன் வீட்டு மின்னிணைப்பும் செய்து கொடுக்கப்படும்.


இலங்கையில்

## தமிழ்ப் பகுதிகளின் இன்றைய நிலை; ராஜ்ய சபாவில் கவலை தெரிவிப்பு

புதுடில்லி, ஆக. 30
இலங்கைத் தமிழ்ப் பகுதிகளில் இடம் பெறும் சம்பவங்கள் குறித்து பல உறுப்பினர்கள் நேற்று ராஜ்ய சபாவில் கவலை தெரிவித்தனர்.

இப்பிரச்சினை பற்றிய குழுநிலை விவாதத்தை திரு. வை. கோபாலசாமி எம். பி (தி. மு. க.) தொடக்கி வைத்தார்.

இலங்கையில் மிகமிக மோசமான நிலை நிலவுகிறது. ''பிரச்சனைக்கு முடிவே புலப்படவில்லை'' இப்படி உறுப்பினர்கள் கூறினர்கள்.

ஆயுதங்களை ஒப்படைக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஒருபுறம் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். மறுபுறம் இலங்கை அரசு தனது ஒப்பந்தக் கடமைகளை நிறைவேற்றுவதாக வில்லை.'' என்று திரு. கோபாலசாமி தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்திவிடும்படி திரு. கோபாலசாமி இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார். (ஒ-எ)

## பூஸா உண்ணாவிரதிகள் 6 பேரின் உடல்நிலை பாதிப்பு

### ஒருவரின் நிலை மிக மோசம்

கொழும்பு, ஆக. 30
பூஸா தடுப்பு முகாமில் சாகும்வரை உண்ணாவிரதமிருந்து வரும் தமிழ்க் கைதிகளில் ஆறு பேரின் உடல்நிலை பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஒருவரின் நிலை மிகவும் மோசமடைந்திருக்கிறது

இந்த உண்ணாவிரதிகளின் கோரிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா பேசியபோது அரசாங்கம் பாராமுகமாக இருந்து வருவது குறித்து கவலை தெரிவித்திருந்தார்.

இதேவேளையில் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு, பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகளில் ஒருவர் உண்ணாவிரதிகளைக் கேட்டிருப்பதாக அறியப்படுகிறது.

உண்ணாவிரதிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் ஞாயிற்றுக்கிழமை முதல் குழு அடிப்படையில் உண்ணாவிரதத்தைஆரம்பித்துள்ளனர்.

தினமும் பத்து கைதிகள் வீதம் சுழற்சி முறையில் அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொள்ளுகின்றனர். (ஒ-ஐ)

### காங்கேசன்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை.

எனினும் ஒருசில ஊழியர் மட்டும் தலையாட்டி முன் நிறுத்தப்பட்டுப் பின்னர் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

பிற்பகல் அளவில் உள்ளே இருந்த ஊழியர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்று இறுதியாகக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (ஒ-க-10)

### வான் மீது...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு அருகில் இச்சம்பவம் நடைபெற்றது.

இச்சம்பவத்தை அடுத்து கல்வியங்காடு வீதியூடான போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டன.

நூற்றுக்கு மேற்பட்ட அமைதிப்படையினர் கல்வியங்காடு முத்திரைச்சந்தை, நாயன்மார்கட்டு பகுதியினைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

இறந்தவரது பெயர் விவரங்கள் இச் செய்தி எழுதப்படும்வரை தெரியவரவில்லை. எனினும் இது இயக்க மோதல் சம்பவம் எனச் சொல்லப்பட்டது. (ஒ-10)

### பொலீஸ்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் கிரனேட் ஒன்றை வீசினராம்.

வேகமாக வந்த வாகனத்தை நோக்கி இந்த கிரனேட் வீசப்பட்ட காரணத்தினல் அதுகுறி தவறி நிலத்திலேயே விழுந்து வெடித்து விட்டதாம்.

இதனை அடுத்து நடைபவனியாக அந்தப் பகுதிக்கு வந்த அமைதிப் படையினர் பலரைக் கைது செய்தும், தாக்கியும் முகாமுக்கு அழைத்துச் சென்றனர் எனத் தெரியவந்தது. (ஒ-க-9)

### ஈழத்----

(1ம் பக்கத்தொடர்ச்சி)

களையும் கவர்ணர் ஆட்சி கைது செய்துள்ளது.

உடல் ஊனமுற்றவர்களையும் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது.

உடனடியாக அவர்களை விடுதலை செய்யுங்கள். இலங்கையில் போர் நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழையுங்கள்.

இப்படி திரு. என். வி. என், சோமு பேசினர். (ஒ-எ)


**WANTED TEACHER**

**ST. PATRICK'S COLLEGE**

JAFFNA.

A Full time Teacher for English Language and for Art in Year 10 & 11. Retired Teachers may also be considered.
Apply immediately to:-

(C6457) **Rector.**


ஆரம்ப ஆசிரியருக்கான

## சேவைக்கால முன்பயிற்சி செப். 6 இல் முடிவுறும்

யாழ்ப்பாணம், ஆக 30
தற்போது நடைபெற்று வரும் ஆரம்ப ஆசிரியர்களுக்கான சேவைக்காலமுன்பயிற்சிகள் செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதியுடன் நிறைவுபெறும்.

யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயசம் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி பயிற்சிகள் செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதியே முடிவுபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதுபற்றி கல்விப் பணிப்பணிப்பாளர் மேலும் தெரிவிக்கையில்,

பயிற்சி முடிவுறும் திகதி பற்றிய கடிதங்கள் 7 பயிற்சி நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பயிற்சி முடிந்ததும் பயிற்சி பெற்றவர்களின் விவரங்கள் கல்விச் சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும்.

மேற்படி ஆணைக்குழுவே இவர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் என்ருர். (ஒ-க)

### பெண்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜோன்ஸ் கல்லூரிக்கு அருகில் உள்ள ''பாம் கோர்ட்''டுக்கு சமீபமாக, பிற்பகல் 4. 50 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

தமிழ்ப் பெண்களின் மகத்துவத்தைப் பாதுகாக்கவேண்டும் என்று யாழ்ப்பாணப் பிரசைகள் விடுத்த விசேட வேண்டுகோளின் பேரிலேயே பெண் பொலீஸார் இங்கு வரவழைக்கப்பட்டனர்.

பெண் பொலீஸார் மீது தாக்குதல் நடத்துவது ஒரு வீரச் செயலா அல்லது கோழைத்தனமா என்று யாழ்ப்பாணப் பிரசைகள் தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்ளவேண்டும், (அ-க)

### விரிவுரையாளர்----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வுரையாளர்கள். எமது மாணவர்களுக்குச் சேவை செய்வதையே நோக்கமாக கொண்டவர்கள். இவர்கள் பல்கலைக்கழக அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை என்பனவற்றை காட்டியும் கூட அமைதிப்படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

அமைதிப்படையினரின் தக்குதல்களுக்குஉள்ளாகிய சுமார்பதினைந்து (விரிவுரையாளர்களும், ஊழியர்களும்) பேர் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் முறையிட்டுள்ளனர்.

பல்கலைக்கழக அடையாள அட்டைகளை வைத்திருப்போரை தாக்குவதை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும்.

கலந்துரையாடலின் போது குழுவினர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தனர்.

அப்போது அமைதிப் படை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:-

''பல்கலைக் கழக விரிவுரையாளர்களும், ஊழியர்களும் அப்பாவிப் பொதுமக்கள் என்பதை நாம் அறிவோம்.

அமைதிப்படையினக்கு எதிராக தாக்குதல்கள், வன்முறைகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் இவர்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவது தவிர்க்க முடியாததாக உள்ளது'' என்று கூறப்பட்டதாம்.

பல்கலைக் கழக குழுவினுல் ஒரு முறைப்பாட்டுக்கடிதமும் அமைதிப் படை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது. (ஒ 5)

### விடுதலைப்புலி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் நம்பிக்கையாக அறியவந்துள்ளது.

இவ்வாருன ஒரு தேர்தல், இயக்கமோதல்களை வளர்த்து தமிழ்ப் பகுதிகளில் பெரும் குழப்பமான சூழ்நிலையையே உண்டாக்கும் என அந்த அமைப்புப்பிரமுகர்கள், இந்திய அதிகாரிகளிடம் எடுத்துக் கூறியுள்ளனராம்.

இதே வேளை—

இலங்கையில் அருங்கட்சிக்குள் பெரும்பிளவுகள் ஏற்படும் அறிகுறிகள்இருப்பதாகஇந்தியா உணர்வதாகவும், அதனுல் ஜனுதிபதி தேர்தலுக்கு முன் வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தத் தூண்டி வருவதாகவும் சொல்லப்படுகிறது. (அ-3)

## ஷெல் வீச்சு

கிளிநொச்சி – இரணைமடுக்குளத்திற்குச் சமீபமாக முகாம் அமைத்துள்ள இந்தியப் படையினர் நேற்று பிரஸ்தாப பகுதிகளை அண்டிய காட்டுப்பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதுடன் துப்பாக்கிப்பிரயோகமும் செய்தனர்.

இதனுல் இரணைமடு, கனகாம்பிகைகுளம், திருவையாறு ஆகிய பகுதிகளில் பதற்றம் நிலவியது.

பிரஸ்தாப பகுதிகளில் கேட்ட குண்டுச் சத்தங்களை அடுத்து இப்பகுதி மக்கள் பலரும் பலவிதமாகப் பேசிக்கொண்டனர். (ஒ-9-10)

### காலையில் படக்காட்சி

யாழ்ப்பாணம். ஆக. 30
இன்றுமுதல் ஊரடங்கு உத்தரவு முற்ருக தளர்த்தப்படும் வரை சகல மினி சினிமாக்களிலும் காலை 10-30 மணிக் காட்சி காண்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட மினி சினிமா சங்கமே இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

பாடசாலை நாட்களில் மினி சினிமாக்களில் காலைக்காட்சி காண்பிக்கப்படக்கூடாது என கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

ஆனுல் இதுபற்றி மினி சினிமா உரிமையாளர்கள் மகஜர் ஒன்றின் மூலம் வேண்டுகோள் விடுத்ததை அடுத்து பிரஸ்தாப வேண்டுகோளை பரிசிலனை செய்த மினிசினிமா சங்கத்தினர் காலைக்காட்சி காண்பிக்கப்படும்போது பாடசாலை மாணவர்களை அனுமதிக்கக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில் தற்பொழுது அனுமதி வழங்கியுள்ளனர். (ஒ-9)

### தட்டச்சு திருட்டு

யாழ்ப்பாணம், ஆக. 30
யாழ்ப்பாணம் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் — 1983 க்குச் சொந்தமான தட்டச்சு இயந்திரம் ஒன்று திருடப்பட்டுள்ளது.

கண்டி வீதியில் உள்ள அலுவலகத்தில் கடந்த 26 ஆம் திகதி இந்தத் திருட்டு இடம்பெற்றது. (ஒ-க)

### விடுவிப்பு

வட்டக்கச்சி, ஆக. 30
பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் வேலை செய்யும் கணபதிப்பிள்ளை நவரத்தினராசா விடுதியில் வைத்து கடந்த 23ஆம் திகதி இரவு இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சி பிரசைகள் குழுவினர் எடுத்துக்கொண்ட முயற்சியை அடுத்து இவர் 28 ஆம் திகதி விடுவிக்கப்பட்டார். (ஒ-ரி)

### ஐ. சோ. அணி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

இன்னெரு சம்பவத்தில் யு. என். பி. உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினுல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதுவரை தென் இலங்கையில் 400 க்கு அதிகமானவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர், (ஒ-எ)

ஒப்பந்தத்தை ஏற்கும்வரை

## பிரபாகரனுடன் இனி பேச்சு எதுவும் நடத்தப் போவதில்லை

### நரசிம்மராவ் அறிவிப்பு

புதுடில்லி, ஆக. 30
இந்திய - இலங்கை உடன்பாட்டை ஏற்காத வரை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுடன் இந்திய அரசு பேச்சுக்களை நடத்தப்போவதில்லை.

இப்படி இந்திய வெளியுறவு அமைச்சர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்தார்.

ராஜ்ய சபாவில் இலங்கைப் பிரச்சினை குறித்து நேற்று நடந்த விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில் வெளிவிவகார அமைச்சர் பி. வி. நரசிம்மராவ் சொன்னதாவது:

ஆயுதங்களை ஒப்படைத்து அமைதி உடன்பாட்டை ஏற்பதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் முதலில் அறிவித்தனர்.

துரதிருஷ்டவசமாக அவர்கள் அதில் இருந்து பின்வாங்கினர். அதனுல் பேச்சுக்கள் நடத்தவே இடமில்லாமற் போய்விட்டது.

ஒப்பந்தம் பற்றிப் பேச்சுக்கள் நடத்த முடியாது. சமத்துவம், பூரண பாதுகாப்பு ஆகியவற்றை தமிழர்களுக்கு வழங்குவதாகவும் ஐக்கிய இலங்கையை உறுதிப்படுத்துவதாகவும் ஒப்பந்தம் அமைந்துள்ளது.

பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகண்ட பின்னரே இந்திய அமைதிப்படை திருப்பி அழைக்கப்படும்.

யுத்தம் ஒன்றை நடத்தவோ, இராணுவத் தீர்வு ஒன்றைக் காணவோ இந்திய அமைதிப்படை இலங்கைக்கு அனுப்பப்படவில்லை.

**முன்னர் இல்லை**

இலங்கையின சகலராலும் ஏற்றுக் கொள்ளப் படக்கூடிய நிலை ஒன்றை உடன்பாடு ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலை முன்னர் இருந்தது இல்லை.

மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மேலும் கூட்டப்படும். மாகாண சபை நடைமுறை அமுலுக்கு வந்த பின்னரே அதிகாரங்களை அதிகரிப்பது இடம்பெறும்.

வெகுவிரைவில் சுமுகமான நிலைமை ஏற்படும் என்று நம்புகிறேன். தமிழர்கள் அப்போது தேர்தலில் கலந்து கொள்ள முடியும்.

உடன்பாட்டை அமுல் நடத்துவதற்குத் தடையாக சில எதிர்பாராத நிகழ்ச்சிகள் ஏற்பட்டு விட்டன. அது குறித்து வருந்துகின்றேன்.

ஒப்பந்தம் இரண்டு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவை வளர்க்கவும் அணிசேராத் தன்மையை உறுதிப்படுத்தவும் உதவும்.

இப்படி அமைச்சர் நரசிம்மராவ் சொன்னுர். (அ-எ)

### விரைவில் முடிவு?

யாழ்ப்பாணம், ஆக. 30
வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக ஜனுதிபதி செயலகம் விரைவில் முடிவு செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இதேவேளையில் புதுடில்லியிலிருந்து நாடு திரும்பிய இந்தியத்தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் நேற்று முன்தினம் ஜனுதிபதி திரு. ஜே.ஆர் ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேசினுர்.

பேச்சுவார்த்தையின் விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (ஒ-ஐ)

## மரண அறிவித்தல்கள்

### குணரெட்ணம் சண்முகநாதன்

**(Microbiologist, U. K)**

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த குணரெட்ணம் சண்முகநாதன் லண்டனில் காலமானுர். இவர் காலம்சென்ற குணரெட்ணம் தம்பதிகளின் அன்பு மகனும், கந்தர் மடத்தைத் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் காலம்சென்ற கனகம்மா அவர்களின் அன்பு மருமகனும், சோதீஸ்வரியின் அன்புக் கணவரும், ராதிகா, சங்கீதா, லக்ஷ்மணனின் அன்புத் தந்தையும், ஜெயசிங்கம் (Jaffna College) காலம்சென்ற பாலசிங்கம், தர்மராசா, திருமதி சரஸ்வதி செல்வரெட்ணம் (Colombo), திருமதி மகிழ்தேவி பரமலிங்கம் (Canada), இராசமோகனின் அன்புச் சகோதரரும், கிஷானியின் அன்புப் பெரியப்பாவும், திருமதி செல்லத்துரை (Veterinary Surgeon Chankanai), பரமேஸ்வரன் (U.K)யின் மைத்துனரும் திரு. செல்லத்துரை (National Paper Corporation) ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

தகவல்;
**எஸ். சுப்பிரமணியம்.**

5, அம்மன் வீதி,
கந்தர்மடம். (6070)

### அன்னலிங்கம் இராஜசேகரம்

சுதுமலை வடக்கைச் சேர்ந்த **அன்னலிங்கம் இராஜசேகரம்** என்பவர் காலமாகிவிட்டார். இவர் திரு. திருமதி அன்னலிங்கம், பரமேஸ்வரியின் அருமைப் புதல்வரும், வசந்தகுமாரி, குணசேகரம், வவா, குவேனி, பவானி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருச்செல்வத்தின் மச்சானும் சுதா, தீபா, சுஜி ஆகியோரின் மாமனுரும், முல்லைத்தீவு சிமாட்டி ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளர் முத்துலிங்கம் புஸ்பபூரணம், வவுனியா சின்னராசா, அன்னலட்சுமி ஆகியோரின் பெருமகனுமாவார்.

சோமசேகரத்தினம் கமலவேணி, சுந்தரலிங்கம், அம்மோய் ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னுரின் ஈமக்கிரியைகள் 31-8-88 புதன்கிழமை 11 மணிக்கு நடைபெற்று நல்லடக்கத்திற்காக மானிப்பாயிலுள்ள பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்: **கண்ணன்**

சுதுமலை வடக்கு
மானிப்பாய். (6251)

### அக்கினேசம்மா (செல்லி)

மண்டைதீவு அக்கினேசம்மா (செல்லி) காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இயக்கோமடுத்தீன் (கொன்ஸ்ரைன்ரயின்) அவர்களின் அன்பு மனைவியும்யோண்பிள்ளை, கிறிஸ்தீனம்மா, லாசறஸ் (ஆசிரியர் புனித சாள்ஸ் ம. வி), அருட்சகோதரி யூட் (அதிபர் கொ/பம்பலப்பிட்டி தமிழ் ம.வி) ஒலிவம், ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்லமணி, ஞானமுத்து, ஜேர்மனம்மா, ஸ்ரஸ்லாஸ் (சுவிஸ்சலாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும் அருட்திரு. விக்டர்பிலேந்திரன் (அதிபர் புனிதமாட்டீனுர் குருமடம்) அருட்செல்வன் அன்ரனிதாசன் (புனித சேவியர் குருமடம், கொழும்புத்துறை) திரு ஜோன் சென்ஜோட்ஜ் ஜீவா (ஜேர்மனி) செல்வி அன்ரனிற்ரு (கிறிசா) (யாழ்/தி.கு. க.ம. மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னுரின் பூதவுடல் 31-8-88 புதன்கிழமை பி. ப. 2.30 மணிக்கு மண்டைதீவு புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை தயவுசெய்து உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்ருேம்.

பிள்ளைகள்

தகவல்:
திரு. ம. யோண்பிள்ளை
(மகன்)

4 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 30-08-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Tuesday 30th August 1988


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org